கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 18 | திகதி : 25.12.2024 | விலை : 75.00

## திருத்தந்தையின் நத்தார் செய்தி



கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை எதுவும், எவராலும் பிரிக்க முடியாது என்பதை இக்கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நன்கு உணர்ந்து கொள்வோம். எம் மீட்பராம் இயேசுக் கிறிஸ்து மகிழ்ச்சியின் ஆண்டவர். அவர்தரும் மகிழ்ச்சியானது உலக மகிழ்ச்சி போன்றதல்ல மாறாக, கவலையற்ற உறுதியான அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்ட இதயத்தின் மகிழ்ச்சியாகும்.

குழந்தை இயேசு நம் மகிழ்ச்சியின் ஊற்று. கிறிஸ்து இயேசு நம்மோடு எம் துன்ப வேளையில் உடனிருக்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் என்றும் மகிழ்ச்சியாக வாழ்வோம். இம்மகிழ்ச்சியை எம் உடன் பிறப்புக்களுடன் பகிர்ந்து வாழ்வோம். குழந்தை இயேசுவின் மீட்பின் செய்தியை பிறருக்கு பறைசாற்றிடுவோம்.

இந்த யூபிலி ஆண்டு இயேசுவின் இதயத்தில் பிறந்த இரக்கத்தின் ஆண்டு! 2025 யூபிலி ஆண்டு அமைதி மலரும் ஆண்டாக அமையட்டும். அனைவர் மீதும் இறை நம்பிக்கையும் அமைதியும் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

## யூபிலி ஆண்டில் சமூகங்களுக்குள் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம்

### - கிறிஸ்மஸ் செய்தியில் யாழ். ஆயர்



கிறிஸ்மஸ் நமது மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் பிறப்பை நினைவு கூரும் அமைதியும், அன்பும் நிறைந்த புனித நாளாகும். மனிதகுலம் மீட்புப்பெற இறைவன் மனிதனைத் தேடிவரத் திருவுளமானார். "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்" என்ற யோவானின் இறைவார்த்தைக்கு அமைய இறைவன் நம்மோடு இம்மானுவேலாக என்றும் இருக்கின்றார். இம் மறையுண்மையையே நாம் ஒவ்வொரு முறையும் கிறிஸ்து பிறப்பு விழாவின் போதும் தியானிக்கின்றோம்.

மனித அவதாரம் கொண்ட இயேசுவின் அன்பை நினைக்கும் இப்புனித காலத்தில் நாம் மனித உறவுகளில் நம்பிக்கையையும், மன்னிப்பையும், அமைதியையும் ஏற்படுத்த வேண்டும்.

பலரின் மீட்புக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இறைமகன் எம்மைத் தேடி வந்ததுபோல நாமும் பலரை இன்று தேடிச் செல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம். இறை இயேசுவின் அன்புக்காக ஏங்கியுள்ள எம் உறவுகளுடன் குறிப்பாக பல்வேறு வகையான துன்ப துயரங்களுக்குள்ளாகி நோயாளிகளாகவும், சிறையிலும், இழப்புக்களைச் சந்தித்தவர்களாகவும், காணாமற்போனவர்களின் உறவுகளாகவும் வாழ்வோரில் குழந்தை இயேசுவின் அன்பைப் பகிர முயல்வோம். ஏழை எளிய மக்களுடன் எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து அவர்களும் இயேசுவின் அன்பை உணரத் கரம்கொடுப்போம்.

இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா, எதிர்வரும் யூபிலி ஆண்டின் ஆரம்பமாக அமைவதால் சிறப்பம்சம் பெறுகின்றது. யூபிலி ஆண்டிற்குள் நுழையும் நாங்கள் நமது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம். ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கின்ற கசப்பான காழ்ப்புணர்வுகளைத் துண்டித்து மன்னிப்பின் மக்களாவோம். ப.2

## மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் 4வது ஆயராகத் திருத்தந்தையினால் கடந்த 13.12.2024 தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மன்னார் மறை மாவட்டக் குருக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் ஆயர் என்பது இங்கு குறிப்பிடதக்கது. திருத்தந்தையின் இந்நியமனச் செய்தி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறை மாவட்டக் குருக்களுக்கென ஒழுங்கு படுத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன் போது மன்னார் மறை மாவட்டத்திலுள்ள ஆலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டு இறை மக்களுக்கும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது.

## நம்பிக்கையின் திருப்பயணிகள்



## யூபிலி ஆண்டு 2025

## நத்தார் புதுவருட வாழ்த்துகள்

கிறிஸ்மஸ்!
இறை அன்பின் பரிமாற்றம்
மறை வாக்கின் அரங்கேற்றம்
மன ஏழைகளின் நுழைவுச்சீட்டு
வேடிக்கை மனிதரின் துருப்புச்சீட்டன்று
வானதூதரின் வாழ்த்துக் கேட்டு
அன்னைமரியாள் கலக்கமடைந்தாள்
அன்பின் ஆண்டவனுக்கே அன்னையாகும்
அதியுயர் பேறுபெற்ற கலக்கமது...
ஞானியரின் வார்த்தை கேட்டு
ஏரோதன் கலக்கமடைந்தான்
பாலகனின் பிறப்பில்
பாலகரைத் துடிக்க வைத்த
செங்கோலில் செங்குருதி படியும் கலக்கமது
நாம் அன்னையின் வம்சமா?
அன்றி ஏரோதனின் அம்சமா?
வால்வெள்ளியுடன் இணைந்து
திசைகாட்டியும் வழிகாட்ட
யூபிலி ஆண்டில்
உருக்குலைந்த உள்ளங்களின் நலம் நாடி
உண்மைக் கிறிஸ்தவர்களாக பயணிப்போம்
நம்பிக்கையின் பயணிகளாக...

ஆசிரியர்: இ.இ. வசீகரன்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## எமது எண்ணம்

## இயேசுவின் பிறப்பின் யூபிலி ஆண்டு 2025

கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டாகிய 2025 இவ்வாண்டை மிக விமரிசையாகத் தகுந்த ஆயத்தத்துடன் கொண்டாடுகின்றோம். கிறிஸ்து பிறப்பு காலம் அன்பின் காலம். மகிழ்வை, அமைதியை, இறைவனின் இறையாசீரைப் பகிரும் காலம். கடந்த காலத்தின் நிறைவையும், நிகழ் காலத்தின் மகிழ்வையும், எதிர்காலத்தின் எதிர்நோக்கையும் குறித்துக்காட்டி நன்றியுணர்வுடன் வாழ வழிகாட்டும் காலம்.

கிறிஸ்து பிறப்பின் - 2025 யூபிலி ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறைகூவலுக்கேற்ப புதிய எதிர்நோக்குடன் கூட்டொருங்கியக்கமாக 'நம்பிக்கையின் திருப்பயணிகளாக' நாம் பயணிப்போம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக 2023ம் ஆண்டை 'சங்க ஏடுகளை கற்றறியும்' கற்றல் ஆண்டாகவும், 2024 ஆம் ஆண்டை "இறைவேண்டலின்" ஆண்டாகவும் கொண்டாடிய நாம், இவ் 2025ம் ஆண்டைத் திருப்பயண ஆண்டாக "நம்பிக்கையின் திருப்பயணிகளாக" என்ற கருப்பொருளில் சிந்திக்க அழைக்கின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இக் கிறிஸ்து பிறப்பின் யூபிலி ஆண்டில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடவும், அவரை முழுமையாக அறியவும் - அண்டி வரவும் முயல்வோம்.

அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், உண்மை, நீதி, நேர்மை என்னும் இறையாட்சியின் மதிப்பீடுகளில் வாழ்ந்து இவ் விழுமியங்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்க முனைவோம்.

நாம் வாழும் இந்த அழகிய உலகில் என்றுமில்லாத அளவுக்கு இன்று போர்மேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. அமைதியின் அரசர் இயேசு பிறந்த புண்ணிய பூமியில், இஸ்ரேல்-பாலஸ்தீன மக்களிடையே ஓயாத போர், கிறித்தவர்கள் என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் ரஷ்யா-உக்ரைன் நாடுகளுக்கிடையே நிகழும் யுத்தத்தால் இருதரப்பு மக்களிடையே பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்த நிலையில் 'பைரிக் விக்டரியை' (Pyrrhic Victory) போரின் பாதிப்பிற்கிடையே கொண்டாடி வருகின்றனர்.

இத்தகைய அமைதியற்ற சூழ்நிலையில் அன்பின் அரசர், அமைதியின் மன்னன் இயேசுவின் பிறப்பு பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அத்துடன் ஜனவரி 1, 2025 அன்று திருஅவை 'உலக அமைதி விழாவை' கொண்டாட திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். இந்த இனிய நன்நாளில், 'எங்கள் குற்றங்களை மன்னியும், எங்களுக்கு அமைதி அருளும்' என்னும் அருமையான மையக்கருத்தைத் தியானிக்கவும், செயற்படுத்தவும் திருத்தந்தை அழைக்கின்றார். புத்தாண்டில் நாம் மன்னிப்பைப் பெற்று, பிறருக்கு மன்னிப்பை வழங்கி, அமைதியின் தூதர்களாக வாழ முனைவோம்.

நாம் பிறரை மன்னித்து, மன்னிப்பைப் பெறும்போது, நமது மனச்சுமைகளை இறக்கி வைக்கின்றோம். இயல்பாகவே மன அமைதி பெறுகின்றோம். உடல் நோய்களும், மன நோய்களும் நீங்கி மகிழ்ச்சி அடைந்தவர்களாய், நமது விண்ணகத் தந்தையைப்போல நிறைவுள்ளவர்களாய், கடவுளின் மக்களாய் வாழ்வோம். இக்கருத்தை

*'மனநலம் மன்னுயிர்க் காக்கும்*
*இனநலம் எல்லாப் புகழும் தரும்'* (குறள் 457)

என்கிறார் திருவள்ளுவர். அதாவது மனத்தின் நலம் உயிர்க்கு ஆக்கமாக விளங்கும். சமூக நலமே எல்லாப் புகழையும் (உலகுக்கு) வழங்கும்.

புத்தாண்டில் நாம் மன்னிப்பைப் பெற்று, பிறருக்கு மன்னிப்பை வழங்கி, அமைதியின் தூதர்களாக வாழ்ந்து, எவ்வாறு போரில்லாத புத்துலகம் படைக்கலாம் என்பதை சிந்திப்போம்.

நம் அகத்தில் நிறைந்துள்ள பகைமையை நீக்கி அன்பை விதைப்போமாகில், கயமையை நீக்கி மன்னிப்பை அளிப்போமாகில் நல்மனம் கொண்ட நமக்கு அமைதியும் மகிழ்ச்சியும் வழங்கும் நிலையில், நாம் போரில்லாத புத்துலகம் படைக்க முடியும்.

**இனிய கிறிஸ்துமஸ்- புத்தாண்டு நல்வாழ்த்துகள்!**

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## யூபிலி ஆண்டு அங்குரார்ப்பணம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2025 ஆம் ஆண்டு யூபிலி ஆண்டை டிசம்பர் 24 கிறிஸ்மஸ் நள்ளிரவில் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பெருங்கோவிலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கின்றார்.

அனைத்து தலத் திருஅவைகளில் டிசம்பர் 29 ஆம் திகதி திருக்குடும்ப பெருவிழா அன்று உத்தியோகபூர்வமாக யூபிலி ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றது. அன்றையதினம் யாழ் மறைமாவட்டத்தில் யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யூபிலி ஆண்டுக்கான திருச்சிலுவை ஆசீர்வதித்து ஸ்தாபிக்கப்பட்டு யூபிலி ஆண்டானது ஆரம்பித்து வைக்கப்படும்.

அதேநாளில் எம் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துப் பங்குகளிலும் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யூபிலி ஆண்டு ஆன்மீக ரீதியில் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகும்.

யூபிலி ஆண்டின் மையப்பொருளை வெளிக்கொணரும் பதாதைகளும் அனைத்து ஆயலங்களிலும் காட்சிப்படுத்தப்படும். அத்துடன் யூபிலி ஆண்டில் சிறப்புத் திருப்பலியில் பயன்படுத்தப்படும் வழிபாட்டு கையேடும் யூபிலி ஆண்டு யாத்திரைக்கான சிறப்பு வழிகாட்டிக் கைநூலும் இறைமக்களுக்கு கிடைக்கப்பெறும்.

## மன்னார்ப் படுகொலைகளின் 40ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு



1984 டிசம்பர் 4இல் மன்னார் முருங்கன் பிரதான வீதியில் இருநூறு பேரளவானவர்கள் படுகொலை செய்யப்பட்டது, மெதடிஸ்த திருஅவைப் போதகர் ஜீ. என். ஜெயராஜசிங்கம் (14.12.1984), மேரி பஸ்ரியன் அடிகளார் (06.01.1985) போன்றோரின் படுகொலைகள், முள்ளிக்குளம் (13.12.1984), வட்டக்கண்டல் (30.01.1985), பேசாலை (21.02.1985), அடம்பொன் தாழ்வு (14, 15.06.1985) போன்ற இடங்களில் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் நாற்பதாம் ஆண்டு நினைவேந்தலை நாற்பது விளக்குகள் ஏற்றி முருங்கன் வாழ் மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். முருங்கன் பங்குத்தந்தை அருட்தந்தை செ. இராஜநாயகம் தலைமையில் முருங்கன் கிறிஸ்து அரசர் வளாகத்தில் கடந்த 14.12.2024அன்று பிற்பகல் 2.00மணிக்கு இந்நிகழ்வு இடம்பெற்றது.

மெதடிஸ்த திருஅவைப் போதகர் ஜீ. என். ஜெயராஜசிங்கம், மேரி பஸ்ரியன் அடிகளார் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதன் பின் நாற்பது விளக்குகள் ஏற்றப்பட்டன.

பின்னர் சர்வமதப் பிரார்த்தனை இடம் பெற்றது. போதகர் எனோசன், மௌலவி அரபாத், கஜகரசர்மா குருக்கள், அருட்தந்தை அலெக்சான்ரர் பெனோ சில்வா ஆகியோர் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து தலைமையுரையினை அருட்தந்தை செ. இராஜநாயகம் வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை எஸ். எமிலியானுஸ்பிள்ளை, அருட்தந்தை. பி. யேசுராஜா, 1984ஆம் ஆண்டு மார்கழி 4இல் படுகொலை நடந்த காலத்தில் பணிபுரிந்த வைத்தியர் ஆ. திருநாவுக்கரசு, யாழ். அமலமரித்தியாகிகளின் முதல்வர் அருட்தந்தை ஜயந்தன் பச்சேக், அமதி ஆகியோர் நினைவுரைகளை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, அருட் தந்தை செ. அன்புராசா, அமதி அவர்கள் எழுதிய ஆவண நூலான "84, '85 மன்னார்ப் படுகொலைகள் சொல்வதென்ன?" என்ற நூல் பற்றிய மதிப்பீட்டை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை பி. ஜே. ஜெபரட்ணம் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து ஏற்புரையினை நூலாசிரியர் செ. அன்புராசா, அமதி அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் வரவேற்புரை மற்றும் நன்றியுரை பங்குமக்களால் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியைத் தமிழ்நேசன் அடிகளார் தொகுத்து வழங்கியிருந்தார்.

## துயர் பகிர்கின்றோம்

யாழ். அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி S. சுதர்சன் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி சிலுவைராசா திரேசம்மா** அவர்கள் கடந்த 05.12.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ். மறைமாவட்டக் குருவும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளருமான அருட்பணி T. குயின்சன் அடிகளாரின் அன்புத் தந்தை **திரு குருசுமுத்து திருச்செல்வம்** அவர்கள் கடந்த 12.12.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும்எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# விண்ணக வார்த்தையா? மண்ணக வார்த்தையா?

கரவையூர்ச்செல்வம்

**முன்னுரை**

'நத்தார்' என்ற சொல், இலத்தீனில் நத்தாலிஸ் (natalis) என்ற சொல்லில் இருந்து மருவி, இன்று 'நத்தார்' என்ற 'தமிழ்ச் சொல்'லாக உருவாகியுள்ளது. நத்தாலிஸ் என்ற சொல்லின் பொருள்: பிறப்பு. பின்னர், இதே சொல் இயேசுவின் பிறப்பைக் குறிப்பதாக மாறி விட்டது. 'இயேசுவின் பிறப்பு விழா' என்று சொல்வது பொருத்தமாகவும்,தெளிவாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமையும் என்பது எனது கருத்து. கொன்ஸ்ரன்ரைன், பேரரசன் காலத்தில் கி.பி 336ஆம் ஆண்டு தான் 'கிறிஸ்மஸ்' முதன்முதலாகக் கொண்டாடப்பட்டது. இயேசுவின் பிறப்பு விழாவை மார்கழி 25ம் நாளில் கொண்டாடுவதெனத் திருஅவை குறிப்பிட்டது. காலகாலமாக இதைக்கிறித்தவ உலகமும், பின்னர் அனைத்துலகமும் ஏற்றுக் கொண்டது.

**முதல் அறிவிப்பது யார்?**

வருடாவருடம் இயேசுவின் பிறந்தநாளை முதலில் அறிவிப்பது யார்? இயேசுவின் பிறப்பிற்கு விழாவெடுக்க முன்னர், அதற்கு ஆயத்தமாக நான்கு வாரங்களைத் திருவருகைக் காலமெனத் திருஅவை ஒதுக்கி வைத்தாலும், வணிக உலகம் முந்தி அடித்துக் கொண்டு கார்த்திகை மாதம் பிறக்க முன்னரே இயேசுவின் பிறப்பை 'கிறிஸ்மஸ்' என்று கூறி உலகிற்கு அறிவித்து விடும். இவர்களிடம் பணம் பெற்று ஊடகங்களும் விளம்பரப்படுத்துவார்கள்.

**விளம்பரம் எதற்கு?**

இயேசுவின் பிறப்பு விழாவிற்கல்ல பொருட்களை விற்பதற்குத் தான் விளம்பரங்கள். சேலையை வாங்குங்கள், சட்டையை வாங்குங்கள். வேட்டி சால்வையை வாங்குங்கள். trouser, shirt வாங்குங்கள், நகை வாங்குங்கள், கேக் வாங்குங்கள், கிறிஸ்மஸ் tree வாங்குங்கள், என்று ஒரே 'வாங்குங்கள்தான்'. எங்கே வாங்குவதென்பதிலும் போட்டிகள் உண்டு. வணிக உலகம் ஒரு நுகர்வுக் கலாசாரத்தை ஊக்குவித்து வளர்க்கிறார்கள்.

மத விழுமியங்களோ, இயேசுவின் விழுமியங்களோ இந்த நுகர்வுக் கலாசாரத்தில் கேட்காது. ஒட்டு மொத்தமாக இவற்றைவெறும் உலோகாயதம்(materialism) என்று கூறலாம். இதைப் பொருள் முதல்வாதமென்றும் கூறலாம். 'காசேதான் கடவுளடா' என்ற கோலம்.

**திருவருகைக்காலம்**

இயேசு பிறப்பு விழாவை அர்த்தத்தோடு கொண்டாடத் திருவருகைக்காலமென நான்கு வாரங்களை ஒதுக்கி வைத்துள்ளது, திருஅவை. ஆனால், நடை முறையில் திருவருகைக்காலம் அர்த்தமற்றுப் போய்விட்டது. மறந்தும் போய்விட்டது. மார்கழி மாதம் பிறந்தவுடனேயே 'ஒளிவிழாக் காலம்' ஆரம்பித்து விடும். அது மட்டுமன்றி இந்த ஒளிவிழாக் காலம் ஒரு கொண்டாட்டகாலமாக தோற்றமளிக்கும். கரோல் பாடுவதும் (அதிலும் ஒரு போட்டி), குடில்கள் அமைப்பதும் (இதிலும் ஒரு போட்டி) பரிசில்கள் கொடுப்பதுவும், கிறிஸ்மஸ் tree அலங்கரிக்கப்பட்டு வைப்பதுவும், கிறிஸ்மஸ் தாத்தா வந்து பெரிய வயிற்றோடு ஆடுவதும், கேக் பரிமாறுவதும் நாட்டிய நடனங்களையும் நாடகங்களையும் மேடையேற்றுவதுமென இந்த ஒளி விழாக்கள் களை கட்டி விடும். இந்த ஒளி விழாக்கள். இயேசு பிறப்பு விழாவைமுன் கூட்டியே கொண்டாடி விடுகின்றன. எனது பார்வையில் இவை அனைத்தும் ஒரு பொருள் முதல்வாதமேதான் (materialism) வேலியே பயிரை மேய்கிறதா?

**'மெரி கிறிஸ்மஸ்'**

திருவருகைக்காலத்திலும், இயேசு பிறப்புக் காலத்திலும், ஊடகங்களிலும், கடைகளிலும், ஒளிவிழாக்களிலும், ஏன் சில வேளைகளில் கோவில்களிலும், கேட்கும் ஒரு சொற்றொடர்: 'மெரி கிறிஸ்மஸ்.' இச் சொற்றொடர் எங்கிருந்து வருகிறது? நற்செய்தியில் இருந்து வருகிறதா? பெத்லகேமில் விண்ணில் கேட்ட வார்த்தைகளா? இல்லை, இச் சொற்றொடர்கள்ளுக் கடையிலிருந்து வருகிறது.

மேல் நாடுகளில், அதுவும் குறிப்பாக ஆங்கில நாட்டில் ஆங்கில மக்கள் 'pub' என்றழைக்கப்படும். மதுபானச் சாலைகளில் - எங்கள் மொழியில் கள்ளுக் கடைகள் - தான் ஒன்றுகூடி, குடித்துப்பாடி ஆடிக் கும்மாளம் போடுவார்கள். கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தையும் அந்தக் கள்ளுக் கடைகளில்தான் ஒன்றுகூடி, குடித்து, பாடி, ஆடிக் கும்மாளம் போட்டுக் கொண்டாடினார்கள். அப்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தும்பொழுது "Merry Christmas" என்று கூறி வாழ்த்தினார்கள். ஆங்கிலேயர் எங்கள் நாடு வந்த பொழுது, இதையும் இறக்குமதி செய்தார்கள். இது தவறான அர்த்தம் தராத ஒரு சொற்றொடர் என்று அடித்துக் கூற வேண்டும். ஈழம் கேட்டுத்தோல்வியடைந்தோம். தமிழ்த்தேசியம் பேசி 'பார்' பெர்மிட் பெற்ற கதையாக இயேசு பிறப்பு விழா மாறக்கூடாது.

**கோவில்கள்**

இயேசுவின் பிறப்பைப் பிரதிபலிக்கும் முகமாகக் கத்தோலிக்க ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் குடில் அமைப்பார்கள். இயேசுவின் பிறப்பு பெத்லகேம் நகரில் ஓர் எளிமையான சூழலில், ஏன் ஒரு வறுமையான சூழலில் நடைபெற்ற நிகழ்வை ஞாபகப்படுத்தியே இன்று குடில் அமைக்கின்றோம். ஆனால், அநேகமான குடில்களில் அந்த எளிமையையும் வறுமையையும் பார்க்க முடியவில்லை. கோவிலின் ஒரு மூலையில் குடில் தரும் எளிமைக்கு மாறாக கோவிலின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் திருப்பலிப் பீடம் விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதுவும், பேராலயமென்றால், சிவப்பு கம்பளங்களாலும், சிவந்த மலர்களாலும் ஓர் அரச சூழலையே எடுத்துக் காட்டும். முரண்பாடு மிகத் தெளிவு. ஆண்டுதோறும் பார்த்துப் பழகி, மக்கள் கண்களைக் குருடாக்கி விட்டது. கோவிலில் பாடப்படும் பாடல்களும், இசைதரும் இசைக் கருவிகளும், குருக்களின் திருவழிபாட்டு உடைகளும் ஒருங்கிணைந்து, ஒரு வெற்றிக் கொண்டாட்டமாகவே (triumphal church) காட்சி தரும். எளிமையிலும் ஏழ்மையிலும் பிறந்த இயேசுவை இவையெதுவுமே பிரதிபலிக்கா. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது இவற்றையெல்லாம் ஒரு வகைப் பொருள் முகவாத மென்றே கூறவேண்டும். இவற்றையே "மண்ணக வார்த்தை" யென நான் குறிப் பிடுகின்றேன். இந்த மண்ணக வார்த்தையையே மக்கள் விரும்புகிறார்கள். மத முனைவர்களும் விரும்புகிறார்கள். மாற்றுவது யார்? இயேசுவின் பணிக் காலத்தில், யூத மதம் அர்த்தமற்ற சடங்குகளாலும், சட்டங்களாலும் மக்கள் மேல் சுமை சுமத்தியது. இதை இயேசு கடுமையாக விமர்சித்தார். இன்று, அதே



இயேசுவின் பெயரால், அவரது செய்தியை மறைத்து அர்த்தமற்ற சடங்குகளையும், சட்டங்களையும், பக்தி முயற்சிகளையும் கத்தோலிக்க மக்கள் பெருக்கியுள்ளார்கள். 'மண்ணக வார்த்தை' விண்ணக வார்த்தையை மழுங்கடித்து விட்டது.

**"விண்ணக வார்த்தை"**

"உலகில் அவருக்கு (கடவுளுக்கு) உகந்தோருக்கு அமைதி உண்டாகுக," (லூக் 2:14) மாறிய எனது பாதையில் நின்று (எனது நூல் "மாறிய எனது பாதை மாற்றியவர் யாரோ," 2024 பார்க்கவும்) பாக்கும்பொழுது எனது மனதில் தோன்றிய எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

**ஒரே திட்டம்**

நீண்ட ஓர் அகப் போராட்டத்தின் பின்னர், மரியாள் கடவுளின் திட்டத்தைத் தனதாக்கினாள். "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) இவை, மனம் மாறிய மரியாளின் வார்த்தைகள். உலக வரலாற்றையே மாற்றிய மரியாளின் சொற்கள். தனது திட்டம் வேறு, இறைத் திட்டம் வேறு என்ற நிலையில் நின்று மாறி (மனமாற்றம்), செபத்தில் உய்த்துணர்வு கொண்டு இறைத்திட்டத்தைத் தனதாக்கிய மரியாள், மனதில் அமைதி கண்டாள். கடவுளுக்கு உகந்தவளானாள். அமைதியை அனுபவித்தாள். இயேசு பிறந்தார்.

பிளவில் அமைதியில்லை. முரண்பாடுகளில் அமைதியில்லை. இருமையற்ற ஒரு நிலையில்தான் அமைதி உண்டு. அமைதியில் கடவுள் உண்டு. இந்த அமைதியை மரியாள் அனுபவித்தாள். இந்த அவளின் அனுபவத்தை அகத்தே கேட்ட ஒரு தெய்வீகக் குரல் ஊர்ஜிதப்படுத்தியது. அந்தக் குரலையே, 'விண்ணக வார்த்தை' யென அழைக்கின்றேன்.

**கடவுளுக்கு 'உகந்தவர்' யார்?**

இக் கேள்விக்குப் பதிலை இயேசு தனது மலை உரையில் தெளிவாக்கி உள்ளார். ஏழையரின் உள்ளத் தோர், எளிமையுடையோர், கனிவுடையோர், கருணை உள்ளோர் நீதியை நிலைநாட்ட வேட்கை கொண்டோர், இரக்கமுடையோர், தூய்மையான உள்ளத்தோர், அமைதி ஏற்படுத்துவோர், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் - விண்ணரசுக்குரியவர்கள், (மத் 5:3-10). 'விண்ணரசு' ஓர் உருவகம் இன்றைய மொழியில் ஓர்மை உணர்வு கொள்வோர். ஓர்மை உணர்வுடையோர் அமைதியை அனுபவிப்பர்.ஓர்மை உணர்வில் பிளவில்லை. முரண்பாடுகள் இல்லை: இருமைவாதம் இல்லை. அமைதி உண்டு.

பிளவுபட்ட மக்கள் பிரிவினைகளை வளர்த்து வருகிறார்கள். வேறுபாடுகளை வளர்த்து வருகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இயேசுவின் பிறப்பு விழா சொல்லும் செய்தி : அமைதி, அமைதியை அனுபவியுங்கள், சமாதானத்தைப் பரப்புங்கள், நீதியை நிலைநாட்ட முயலுங்கள், கருணை காட்டி வாழுங்கள், தூய உள்ளத்தோடு வாழுங்கள், கிறிஸ்துவை அனுபவிப்பீர்கள்.

இந்த இயேசுவின் செய்தி, இயேசு பிறப்பு விழாவின் செய்தி. யூத மக்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, சாதி, மத, மொழி, நாடு, ஆண் - பெண் அனைத்துப் பிரிவினைகளையும் மேவி, உலக மக்களுக்குச் சொல்லும் செய்தி.

ஆகவே, கடவுளுக்கு உகந்தவர்கள் அனைவரும் இயேசுவின் பிறப்பு விழாவை மனதாரக் கொண்டாடலாம். உங்கள் உள்ளங்களில், அதுவும் எளிமையான உள்ளங்களில் குடில்களை அமையுங்கள். அங்கு கிறிஸ்துவை அனுபவிப்பீர்கள். உங்களில்,உங்கள் வீடுகளில், உங்கள் சமூகத்தில், உங்கள் நாட்டில், உங்கள் நிறுவனங்களில் நீதியை நிலைநாட்ட வேட்கை கொண்டிருங்கள். அங்கு அமைதி நிலவும். அந்த அமைதியில் கிறிஸ்துவை அனுபவியுங்கள். அயலவர்பால், பாதிக்கப்பட்டோர்பால் இரக்கமுடையவர்களாக, கருணை உடையவர்களாக வாழுங்கள். அந்தக் கருணையில் கிறிஸ்துவை அனுபவிப்பீர்கள். நீங்கள் அமைதியில் வாழ்ந்து, அந்த அமைதியைப் பரப்புங்கள். கிறிஸ்துவின் சாட்சிகளாவீர்கள். இயேஉலகளாவியவர். அவரது செய்தியும் உலகளாவியது.

சாந்தி. சாந்தி. சாந்தி.

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி

**அண்ணே, ஏண்ணே ஏன் சோகமா இருக்கீங்க? எம் பொண்டாட்டி 3 மாசம் என்கூடபேசமாட் டேன்னு சொல்லிட்டாய்யா. அதுக்கு சந்தோசம் இல்ல படனும். அழுவுறீங்க?.. அந்த 3 மாசம் இன்டையோட முடியுதப்பா...**

*சமீபத்தில் படித்த நகைச்சுவை,*

மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்பது ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும் என்பதுதான் இயல்பு. மிட்டாயை விரும்பும் குழந்தைக்கு “உனக்கு மிட்டாய் தருகிறேன்” என்றால் அது மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. ஏழை ஒருவனுக்கு லாட்டரியில் 1 லட்சம் ரூபாய் விழுந்திருக்கிறது என் றால் அவனுக்கு அது மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. எனவே மகிழ்ச்சியூட்டு வது ஒருவரது நிலையையும், வயதையும், தேவை யையும், விருப்பத்தையும் பொறுத்தது. ஆனால் இயேசுவின் பிறப்பை இடையர்களுக்கு அறிவித்த வானதூதர்கள் “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி யூட்டும் நற்செய்தி”யை அறிவிப்ப தாகக் கூறுகின் றார்கள். எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்று ஒன்று இருக்க முடியுமா? மதம், நாடு, சாதி, மொழி, இனம், வயது, தேவை, விருப்பம் இவைகளையெல்லாம் கடந்து எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற் செய்தி எது? ஏன் அந்த நற்செய்தி பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது? அந்த மகிழ்ச்சியை யாரால் தரமுடியும்? அதை எப்படிப் பகிர முடியும் என்ற கேள்விகளுக்கான விடைகளைத் தேடுவோம்.

## எது மகிழ்ச்சி?


முதலில் மகிழ்ச்சி என்பது வெறும் உணர்ச்சி அல்ல. “நான் மகிழ்ச்சியாயிருக்க என்ன செய்ய வேண்டும்?’ என்று கேட்ட அரசனிடம் முனிவர் சொன்னார்: “எந்தக் கவலையுமில்லாமல் எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கும் ஒருவனைக் கண்டு பிடித்து அவனது சட்டை ஒன்றை வாங்கி நீர் அணிந்து கொண்டால் நீரும் எப்போதும் மகிழ்ச்சி யாக இருக்கமுடியும்”. அத்தகைய மனிதனைக் கண்டுபிடித்து அவனது சட்டைகளுள் ஒன்றை வாங்கிவரத் தனது பணியாளர்களுக்குக் கட்டளை யிட்டான் அரசன். திரும்பி வந்த பணியாளர்கள் சொன்னார்கள்: “ஒரே ஒரு மனிதன்தான் அவ்வாறு



மகிழ்ச்சியாக இருந்தான். ஆனால் அவனிடம் அணிவதற்கு ஒரு சட்டை கூட இல்லை. அவ்வளவு ஏழை அவன். அதனால்தான் அவனிடமிருந்து சட்டை வாங்கி வர முடியவில்லை”. ஆம், உண்மை மகிழ்ச்சி என்பது பொருள்களிலோ, ஆட்களிலோ, நுகர்விலோ, வெற்றியிலோ அல்ல. இவைகளிலிருந்தும், ஐம்புலன் களிலிருந்தும் கிடைப்பது மகிழ்ச்சியல்ல. மாறாக, இன்பம் என்னும் சிறிது நேரமே நீடித்து மறையும் உணர்வுகள் நிலையற்றது. எனவேதான் இதை “சிற்றின்பம்” என்று அழைக்கிறோம்.

## எதில் மகிழ்ச்சி?

அப்படியானால் மகிழ்ச்சியை யார் தர முடி யும்? யார் பெற முடியும்? இடையர்களுக்கு அறிவிக்கப் பட்ட பெரும் மகிழ்ச்சியூட்டும் என்னவென்றால் “இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின் றார்” (லூக் 2:11). ஆண்டவராகிய மெசியா நமக்காக நம்மோடு இருப்பதில்தான் பெரும் மகிழ்ச்சி என்பதைத் தான் இவ்வறிக்கை வெளிப்படுத்துகிறது. மனுவுரு வெடுக்கும் கடவுளின் உடனிருப்புதான் மகிழ்ச்சியின் ஊற்று. “கடவுள் நம்மோடு” (இம்மானுவேல்) என்ற அனுபவம்தான் மகிழ்ச்சியைத் தர முடியும். எனவேதான் செப்பனியா இறைவாக்கினர் பாடினார் இம்மகிழ்ச்சி ஒரு சிலரின் தனிச் சொத்து அல்ல. இறைவனின் உடனிருப்பை உணர்ந்து அவரோடு இணைந்திருக்கும் அனை வருக்கும் உரித்தானது. எனவேதான் வானதூதர்கள் “எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி” என்று அறிவிக்கின்றார்கள். எல்லாரும் இம்மகிழ்ச்சியைப் பெறுவதற்கான அழைப்பாக இது இருக்கிறது.



## ஏன் மகிழ்ச்சி இல்லை?

இம்மகிழ்ச்சிக்குப் பல தடைகள் உண்டு. அவற்றைத் தகர்த்தெறிய வல்லவர் நம்முடன் இருக் கும் இறைவன். கீழ்க்காணும் தடைகளை உடைப்போம் இம்மகிழ்ச்சியை உடைமையாக்க.

**1.ஐயம்**

நமது கடவுள் என்னோடு இருக்கிறாரா என்ற ஐயம் இம்மகிழ்ச்சியை அனுபவிக்கத் தடையாக இருக்கி றது. எனவேதான் ஐயத்தினால் மகிழ்ச்சியின்றி இருந்த தோமாவிடம் இயேசு, “ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்” (யோவா 20:27) என்றார். சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த இடையர்களுக்கு இந்நற்செய்தி அறிவிக்கப்படுவதன் மூலம் “பின்தங்கிய நிலையில் இருக்கும் எனக்கு இம்மகிழ்ச்சி கிடைக்குமா” என்று யாரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

**2.அச்சம்**

அச்சம் மகிழ்ச்சியைப் பறித்துச் சென்றுவிடும் என்பதால்தான் மாபெரும் நற்செய்தியை இடையர்களுக்கு அறிவிக்குமுன் ‘அஞ்சாதீர்கள் என்று வானதூதர்கள் இடையர்களின் அச்சத்தைப் போக்குகிறார்கள்.

**3.துயரம்**

நம் மகிழ்ச்சிக்கு முற்றுப்புள்ளியிட நினைக்கும் துயரத்தையும் நாம் அன்போடும் எச்சூழ்நிலையிலும் இறைவன் என்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை யோடும் தாங்கும்போது, அத்துயரத்தையும் மகிழ்ச்சியாக

**அருட்பணி அன்ரு டி ரோஸ்**

மாற்ற வல்லவர் நம் கடவுள். எனவேதான் இயேசு, “உறுதி யாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அழுவீர்கள் புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்’ என்று வாக்களிக்கிறார். அபக்கூக்கு இறைவாக்கி னர் “அத்திமரம் துளிர்த்து அரும்பாமல் போயிடினும். திராட்சைக் கொடிகள் கனி தராவிடினும், ஒலிவ மரங்கள் பயன் அற்றுப் போயினும், வயல்களில் தானியம் விளை யாவிடினும், கிடையில் ஆடுகள் அழிந்துபோயினும், தொழுவங்களில் மாடுகள் இல்லாது போயினும் நான் ஆண்டவரில் களி கூர்வேன்” (அபக் 3:17)என்று அறிக்கை யிடுகிறார்.

**4. சிற்றின்ப நாட்டம்**

முற்றும் துறந்த முனிவர் “நீர் பேறுபெற்றவர்’ என்று தன்னைப் பாராட்டிய அரசனைப் பார்த்துச் சொன்னார். “அரசே நீர் என்னைவிடப் பெரிய துறவி. ஏனெனில் நான் பேரின்பத்தை அடைய சிற்றின்பங் களைத்தான் துறந்தேன். ஆனால் நீரோ சிற்றின்பங் களுக்காக பேரின்பத்தையே துறந்து விட்டீரே!” சிற்றின்பங் களில் சிறைபட்டுக் கிடக்கும் மனிதன் மகிழ்ச் சியை இழக்கிறான். அற்பமானவைகளுக் காக அற்புதமானவைகளை இழப்பதுதான் வேதனை. ஐம்புலன்களுக்கு அடங்கி இணையதளங்களில் முடங்கிக் கிடக்கும் மனிதனால் இம்மகிழ்ச்சியை அனுபவிக்கவே முடியாது.

## எங்கும் மகிழ்ச்சி

இம்மகிழ்ச்சியை அனுபவிப்பவர்கள் அதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வார்கள். அதுவும் ஒரு மறைபரப்புப் பணியே. வானதூதர்களின் அறிவிப்பைக் கேட்டு மகிழ்ச்சி அளிக்கும் மீட்பரைக் கண்ட இடையர்கள், பிறருக்கு அதைத் தெரிவிப்பதை, தம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதை, கடவுளைப் போற்றிப் புகழ்வதைக் காண்கின்றோம். மூடி மறைக் கப்பட வேண்டிய மகிழ்ச்சி அல்ல இது. பறை சாற்றப்பட வேண்டிய மகிழ்ச்சி பகிரப்பட வேண்டிய மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை அனுபவிப்பவர்களும் பிறரையும் மகிழ்ச்சிப் படுத்த வேண்டும். எனவேதான் இயேசுவைத் தன் உதரத்தில் தாங்கிய மரியாள் எலிச பெத்தைச் சந்தித்தபோது எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை கூட அக்களிப்பால் துள்ளியது (லூக் 1:44). “மகிழ்ச்சியின் நற்செய்தி” என்ற தனது திருத்தூது உரை யில் திருத்தந்தை பிரான்சிஸ் “அடக்க வீட்டிற்குச் சென்று வந்தவரின் முகம் போல நற்செய்தி அறிவிப்பாளரின் முகம் இருக்கக்கூடாது” என்கிறார். மகிழ்ச்சியோடு இல்லாதவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. A sad Christian is a bad Christian, எல்லா மக்களுக் கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியையும், அந்த மகிழ்ச்சிக்குக் காரணமான மெசியா என்னும் மீட்பரையும் பெற்றுக்கொண்ட, ஏற்றுக்கொண்ட நாம் உண்மையிலேயே பேறு பெற்றவர்கள். திருவருளடையாளங்களோடும் அவர் வாழும் ஏழைகளோடும் நம்மை இணைத்து மகிழ்ந்து அந்த மகிழ்ச்சியைப் பிற ரோடு பகிர்வோம். மகிழ்ச்சியூட்டும் நற்செய் தியை நாம் அனைவருக்கும் அறிவிப்போம். என்று அதுவே நமது உண்மையான கிறிஸ்துமஸ்.

## இங்குதான் பிறக்க வேண்டும்



இருள் புடைசூழ்ந்திருக்க
இக்கவி உலகில் மனித
கருவறுக்கும் கஜவர்கள்
நிஜம் மறந்து பாதை
மாறிய மனிதர்கள்
அன்பு தேடி அழிந்து
போகும் இளைஞர் சமூகம்
பெரியோரின் அறக்கூற்றுக்கு
சிறுவர்களின் மறுகூற்றுக்கள்
பேரினவாத அரசுகளின் கைகளில்
பூகோளப் பந்து
சுயநல அரசன் - தன்
சுயநல அரசை நிறுவிவிட்டான்
மனித வாழ்வு மலர்
வாடி விட்டது
பாலகா நீர் வரவேண்டும்
வாழ்நாள் ஊற்றாக
மறையாத ஒளியாக
பயன் தரும் உரமாக
மனித மரம் தழைத்து
வாழ்வு பூ மலர்ந்திட
விடுதலை தேவா - நீர்
பிறக்க வேண்டும்
குடிலில் அல்ல
மனித மனங்களில்

**தே.றொஹான்**
**2ம் வருட மெய்யியல்**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகள் அர்த்தமுள்ளதாக அமையட்டும்



**ஆ**தாமும் ஏவாளும் செய்த பாவங்களினால் மனுக்குலம் யாவும் சீரழிந்து கெட்டுப்போயிருந்த போது அம்மனுக்குலத்தை மீட்டு உலகிற்கு அமைதியையும், சமாதானத்தையும் அருளப் பூவுலகில் கடவுள் தம் ஒரே மகன் இயேசுவை அனுப்பத் திட்டமிட்டு அன்னை மரியாள் மூலமாக அதனை நிறைவேற்றுகின்றார்.

இயேசுவின் பிறப்பு என்பது ஆன்மீக உடல் ரீதியாக இரட்டை அற்புதங்களைக் கொண்டவையாக அமைகின்றன. ஒன்று இறைவன் மனிதனானார். இது ஆன்மீக அற்புதம். மற்றையது கன்னிப்பெண் (மரியாள்) கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுக்கின்றாள். இது உடல் ரீதியான அற்புதம். இந்த இரண்டு அற்புதங்களும் ஒரே நேரத்தில் எவரும் அறியாத மறைமுக நிகழ்வாக நடைபெற்றிருக்கின்றது. (லூக்கா 2:1-7).இந்த இரண்டு அற்புதங்களும் எதனை எமக்கு சுட்டிக்காட்டுகிறது என்றால் நாமும் ஆன்மீக, உடல் ரீதியான பாவ இருளை களைந்து விட்டு ஒளியாகிய இயேசுவைப் பற்றிக் கொண்டு தூய்மை வாழ்வு வாழ வேண்டும் என்பதே ஆகும். மறைமுகமாக நடைபெற்ற இயேசுவின் பிறப்பின் செய்தியை உடனடியாகவே வான தூதர்கள் மகிழ்ச்சியான செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிக்கின்றனர். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வையே உலகெங்கும் வாழும் கிறிஸ்துவ மக்களாகிய நாம் “கிறிஸ்துமஸ்” பெருவிழாவாக வருடாவருடம் கொண்டாடி மகிழ்கிறோம். அதேவேளை இவ்விழாவை நாம் எந்த மனநிலையில் கொண்டாடுகிறோம் என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது?

காரணம், அன்று படிப்பறிவில்லாத சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட, வறுமையில் வாழ்ந்த இடையர் கூட்டம் இயேசுவின் பிறப்பைப் பற்றி வான தூதரின் அறிவிப்பை முதலில் கேட்டு அதனைச் சரிவர அவர்கள் புரிந்து கொண்டதினால்தான் “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக “ என்று பாடி ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்கள் (லூக்கா 2:13-14). ஆனால் இன்று நாம் இயேசுவின் பிறப்பின் நோக்கத்தை சரிவர புரிந்து கொண்ட நிலையில் கிறிஸ்துமஸ்சை அனுசரிக்கின்றோமா…?அன்று நா கட்டவிழ்க்கப்பட்டவுடன் செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு “இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளிதர விடியல் நம்மைத்தேடி வருகின்றது” (லூக்கா 1:78-79) என்று கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றித் தீர்க்க தரிசனம் பாடினான். ஆனால் இன்று நாம் பாவ இருளில் இருந்து விடுபட்டு ஒளியாகிய இயேசுவைப் பற்றிக் கொண்ட மனநிலையோடு கிறிஸ்துமஸ்சை அனுசரிக்கின்றோமா……? அன்று இயேசுவின் பிறப்பின் செய்தியை விண்மீனை வைத்துக் கணித்த ஞானிகள் அரசராக அவரை எண்ணித் தரிசிக்க வந்த போது மாளிகையில் இல்லாது மாட்டுத்தொழுவத்தில் பஞ்சணை மீது இல்லாது புல்லணையில் அவரைப் பார்த்த போது தங்கள் உயர் நிலைகளைத் தூக்கி எறிந்து தம்மை தாழ்த்தி நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள் (மத்தேயு 2:1- 11). ஆனால் இன்று நாம் தாழ்ச்சி உள்ள மனநிலை கொண்டவர்களாக கிறிஸ்துமஸ்சை அனுசரிக்கின்றோமா…..? அன்று சிமியோன் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி கடவுளைப் போற்றி “ஆண்டவரே உமது சொற்படி உம் அடியான் என்னை இப்பொழுது அமைதியுடன் போகச் செய்கின்றீர்” (லூக்கா 2:29) என்று திருப்தியான மகிழ்ச்சியான மனநிலையோடு கூறுகின்றான். ஆனால் இன்று நாம் எமது வாழ்வில் இயேசுவிற்காக இதையெல்லாம் தியாகம் செய்தோம் என்ற திருப்தியான, மகிழ்ச்சியான மனநிலையோடு கிறிஸ்துமஸ்சை அனுசரிக்கின்றோமா…..? அன்று அன்னா என்ற முதுமையான விதவைப் பெண் மீட்புக்காக காத்திருந்த எல்லோரிடமும் குழந்தை இயேசுவைப்பற்றிக் கூறினாள் (லூக்கா 2:38). இன்று நாம் கிறிஸ்துவைப் பற்றி அடுத்தவர்களுக்கு எடுத்தியம்புவதில் நிறைவு பெற்றவர்களாய் கிறிஸ்துமஸ்சை அனுசரிக்கின்றோமா..? இத்தகைய மனநிலைகள் எம்மிடம்இல்லை என்றால் கிறிஸ்துமஸ் வெறும் களியாட்ட நிகழ்வாகவே முடிந்துவிடும்.

இன்று நாம் இயேசுவின் இரண்டாவது வருகையைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இயேசுவின் முதல் வருகை பற்றிய வரலாற்று நிகழ்வை அறியாத மக்களும் உள்ளனர். ஆனால் கிறிஸ்மஸ் பவனிக் குழுக்கள் (Carol) கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் மட்டுமே இயேசுவின் பிறப்பைப்பற்றி ஆடிப்பாடி எடுத்துச்செல்லுகின்றார்கள். இந்நிலை முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும். காரணம் “உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்” என்று ஏசாயா (49:6)இறைவாக்கினர் மூலமாகவும், “இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி” என்று சிமியோன் (லூக்கா 2:32) மூலமாகவும் கடவுள் வெளிப்படுத்தியுள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு கிறிஸ்தவர்கள் வாழாத பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களுக்கும் இயேசுவின் பிறப்புப் பற்றிய வரலாற்று நிகழ்வுகளை நடாத்தி அவர்களையும் மகிழ்விக்க வேண்டும். இப்படியான நிகழ்வுகளால் அவர்களும் இயேசுவைப்பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புகள் உருவாகும். வட்டத்துக்கு வட்டத்துக்கு வெளியே அவர்களை நிறுத்திவிட்டு வட்டத்துக்குள்ளே நாம் நின்று கொண்டுஇயேசுவின் பிறப்பை கொண்டாடும் நிகழ்வுகள் கடவுள் முன் அர்த்தமற்றதாகி விடும்.

இம்முறை நாம் இயேசுவின் பிறப்பைத் தேவையற்ற முறையில் ஆடம்பரமாக, களியாட்டமாக கொண்டாடுவதைத் தவிர்த்து இன, மத பேதமின்றி பொருளாதார நெருக்கடியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும். பாடசாலைப் படிப்பைத் தொடரமுடியாது காரணமாக விட்டு இடைவிலகிய மாணவர்களின் மீள்கற்றல் செயற்பாடுகளுக்கும் உதவிடுவோம். ஏனெனில் “உன் மீது நீ அன்பு கூருவது போல் உனக்கு அடுத்திப்பவர் மீதும் அன்பு கூருவாயாக” (லூக்கா 10:27) என்று இயேசு நல்ல சமாரித்தன் உவமை மூலம் எமக்கு கற்பிக்கின்றார். இந்தப் படிப்பினை செயல் வடிவமாக எம்மில் ஏற்படுமாக இருந்தால் எமது உள்ளத்திலும், இல்லத்திலும், ஆலயத்திலும் இயேசு நிச்சயமாக பிறப்பார். கிறிஸ்துமஸ்சும் அர்த்தமுள்ளதாக அமையும்.

**க.அருள்நேசன்**

## “மனுக்குல மீட்பரை மகிழ்வோடு வரவேற்போம்”

மார்கழித் திங்கள்
மதிநிறை நன்னாளில்
மாட்டுத் தொழுவத்தில்
மண்ணுலகைக் காத்திட….!

விண்ணில் தேவனிவன்
வித்தகர் மிகு செம்மலான
மலர்மகன் உதித்தான்
மனுக்குல மீட்பராய்…….!

ஏழைகள் துயர்துடைக்க
எங்களிறை அவதரித்தார்
மாடமாளிகை வாசமின்றி
மாணிக்கத் தொட்டிலின்றி….!

மார்கழித் கடுங்குளிரின்
மாட்டுத் தொழுவமதில்
மாட்சிமை பொருந்திய
மாதவன் பிறப்பெடுத்தான்….!

கன்னிமரியாள் பெற்றெடுத்த
காவல் தெய்வமிவன்
கருணையின் தேவனாய்
காருண்ணிய மீட்பராய்……!

மனிதநேயம் நிலைபெற
மாட்சிமை மலர்ந்திட
மண்ணிலே உதித்திட்ட
மகத்துவமான மாசற்ற நாள்
பாவிகள் சுமையகற்றி
பாவங்கள் போக்கியே
பண்புடைய மாந்தரை
பாரிற்குத் தரவந்தாரே…..!

அன்பும் அமைதியும்
அகிலத்தில் நிலவிடவே
அல்லல்கள் பலபட்டு
ஆட்கொண்ட அன்பின்ஒளி…!

ஏற்றத்தாழ்வின்றி எல்லோரையும்
ஏற்றமுடன் வழிகாட்டவந்த
எம்மினத்து இரட்சகர்.

மன்னிப்பை வழங்கி
மாசற்றோர் ஆக்கிடவே
விண்ணவத் தேவன்
வித்தகப் பேரொழியாளன்….!

காக்கும் கடவுளாய்
காசினியில் உதித்தநாள்
மாதவன் பிறப்பினை
மகிழ்வோடு வரவேற்போம்

**அ.றொக்சினி**
**மானிப்பாய்**

## புத்தொளியை தாரும் பாலகா



மார்கழிக் கடுங்குளிரில்
மாட்டுத் தொழுவமதில்
பிறந்த உன்னத ஒளியே
எண்ணற்ற துன்பங்கள்
களைந்து
துயரங்கள் தகர்த்திட
நன்னெறியில் எல்லோரும்
அமைதியாய் வாழவதற்கே
இன்னல்களை ஏற்று
விடியலென வந்தவரே
மரியன்னை பெற்றெடுத்த
மாணிக்க மன்னவனே
பூவுலகின் வாழ்வியலால்
அல்லலுறும் அனைவரையும்
ஓர விழிப்பார்வையால்
அன்போடு உற்று நோக்கி
அனைவரையும்
ஆட்கொண்டு
அன்பான உம்
ஆசீரால் நிறைவாக்கி
புத்தொளியை
எமக்கருளும்
பூவுலகில் அவதரிக்கும்
எம் புண்ணிய பாலகனே

**சேரூபன் மேரி அருள்மதி**

## பாலகனை வணங்கிடுவோம்

மண்ணுலகை மீட்பதற்காய்
மனுக்குலத்தைக் காப்பதற்காய்
மார்கழிமாதக் கடுங்குளிரில்
மாடடைக் குடிலினிலே
ஏழ்மைக் கோலமதில்
மரியன்னை மடியினிலே
மானிட மனுமகன்
மாடசி மிகு பாலகனாய்
மண்ணில் அவதரித்தாரே
மகிழ்வோடு வாழ்த்திவோம்
பணிந்து நாமும்
பாலகனை வணங்கிடுவோம்

**சேரூபன் ஜெஃர்லின்**

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# “மறைந்த விண்மீன் மீண்டும் தோன்றியது.”

[மத்: 2:1-12]

அருட்சகோதரி. தெரேஸ்ராணி அ.கா

**நா**ம் இலங்கை அன்னையின் மக்கள் என்பதை இனங்கண்டு ஒருவரை ஒருவர் மாண்புடனும், சமத்துவத்துடனும் நடக்தாதவரை நாட்டில் நிரந்தர அமைதி நிலவப்போவதில்லை என்பதை கடந்த 75 ஆண்டுகள் நீண்ட வரலாறு நிரூபித்துள்ளது. பிரிவினைகள், ஊழல்கள், கொலைகள், களவுகள், போட்டி மனப்பாங்குகளால் எமது நாடு கடந்த காலங்களில் சீரழிந்து சின்னாபின்னமாகியதை நாம் எல்லோரும் அனுபவித்துள்ளோம்.

2024 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா மனிதத்தன்மையின் நிறைவிற்கான அழைப்பின் காலம். இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் வாழுவதற்கான எமது ஒரு தேடல் பயணம். கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைப் போன்ற பேரானந்தமான திருவிழா திரு அவையிலோ, ஏன் முழு உலகிலேயே கூடக் கிடையாது என்பது தான் உண்மை. கடவுளுக்கும், மனிதனுக்குமிடையே நடைபெற்ற சந்திப்பைக் கிறிஸ்துவின் பிறப்பு நினைவுபடுத்துகின்றது.

பிறந்த கிறிஸ்துவை வணங்கச் சென்ற ஞானிகள் வானிலிருந்து காட்சியளித்த திசைகாட்டி ‘விண்மீன்’ மூலம் தமது பயணத்தை கிழக்கிலிருந்து ஆரம்பித்தனர். ஏரோதரசனை சந்திக்க நேர்ந்த போது அந்த ‘விண்மீன்’ மறைந்தது. ஞானிகள் இருளிலே தடுமாறினர். செல்ல வேண்டிய இலக்கு மாறியது. காரணம் என்ன? உண்மை, நேர்மையற்ற, இரகசியத் திட்டத்துடன் இருந்த ஏரோதனைச் சந்தித்தமையே. அவனின் அகங்காரம், அதிகார வேட்கை, கபடத் தலைமைத்துவம் ஞானிகளைத் திசை திருப்பியது. எனவே ‘விண்மீன்’ திசைகாட்டி மறைந்தது. இதய சுத்தியுடன் தேடிய ஞானிகளின் இலக்கை, அவர்களின் திசையை மாற்ற முயன்றான் ஏரோது அரசன்.

“அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே”. ஏரோதரசன் தவறாக ஞானிகளை வழிநடத்தி அவர்களின் திசையை மாற்ற முயன்றான் - ஞானிகள் இருளில் தத்தளித்தனர். இறைவனை இலக்காகக் கொள்ளாது உலகப் போக்கிலும், அதன் சவால்களுக்கும் அடிமையாகி அதிகார ஆசை படைத்த அரசும், மக்களும் நீண்டகாலம் நம் நாட்டில் இருளில் வாழ்ந்தனர். கவலைகளுடனும், சஞ்சலங்களுடனும் அமைதியை இழந்து அங்கலாய்ப்புடன் விடிவிற்காக, சுதந்திரத்திற்காக ஏக்கங்களுடன் வாழ்ந்தனர். நீதி, நேர்மை, உண்மை, அன்பு ஆட்சி மக்களுக்கு மறுக்கப்பட்டன. இதனால் பதட்டங்களும், பயமும் மக்களை ஆட்கொண்டன. சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் மறைக்கப்பட்ட நிலை தலைதூக்கியது. சாதி, மத, இன, மொழி வாதங்கள் தலைவிரித்தாடியது. அன்று கள்ளம் கபடமான ஏரோது அரசன் மாசற்ற குழந்தைகளை கொலை செய்தது போல இராணுவ அடக்குமுறையால் ஆயுதப் போராட்டத்தால் உண்மை இலக்குகள், நோக்கங்கள் மறைக்கப்பட்டன. ஏராளமான உயிரிழப்புக்கள். உரிமைகள் இழக்கப்பட்ட நிலையில் மக்கள் அளவற்ற துன்பங்களையும், துயரங்களையும் சுமந்தனர்.

“என் மக்களாகிய இஸ்ராயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்” (மத்: 2: 6) எமது நாட்டில் அண்மையில் நிறைவு பெற்ற தேர்தல் முடிவு, மறைந்த அமைதியை, மகிழ்ச்சியைத் திரும்பவும் மக்களுக்கு அளிக்கும் உத்தரவாதமாகத் தோன்றியுள்ளது. தரமான, தகைமை பெற்ற, தகுதி வாய்ந்த திசைகாட்டி மக்களை விழிப்படையச் செய்து வழிப்படுத்தக் கிடைத்தமை எமது மக்களுக்குக் கிடைத்த பெரும் ஆசீர்வாதம் என்று தான் மக்கள் உணருகின்றனர். இத்திசைகாட்டி மறைந்த சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், மனித மாண்பு, அன்பு, நீதி, உண்மை, நேர்மைக்கு வழிகாட்டுகின்றது. ஏரோதரசனிடமிருந்து தப்பித்த ஞானிகள் போன்று எமது நாட்டு மக்களும் புதிய திசைகாட்டி மூலம் விடுதலையை, உணரத் தொடங்கியுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக எம்முள் உறைந்திருக்கும் “திசைகாட்டி ‘விண்மீன்’ எமது “மனச்சான்று”. அதுதான் இறைவன் வாழும் ‘திருவிடம்’. நாம் எமது மனச்சான்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தால் எமது சமூகத்தை நன்நெறிப்படுத்த முடியும். மூன்று ஞானிகளும் தம் பயணத்தின் இலக்கை மாற்றியதால் குழந்தை யேசுவைக் கண்டு வணங்கினர். திரும்பவும் தோன்றிய திசைகாட்டி அவர்களை இறைவன் யேசுவிடம் கொண்டு சென்றது. எனவே ஆன்மீகத்தைத் தேடாத நாடு, மறுமலர்ச்சி காண முடியாது. இறையரசின் விழுமியங்களை நாம் அனுபவிக்க எமது புதிய அரசின் திசைகாட்டி வழிகாட்டியாகுமென மக்கள் கனவு காண்கின்றனர். ஞானிகளுக்கு ஏரோதனால் தடைகள் ஏற்பட்டது போன்று எம்மிடையே தடைகள், பிளவுகள், போட்டி மனப்பாங்குகள், உலகின் சவால்களும் நிச்சயமாக உருவாகலாம். அதிலிருந்து நாம் விடுபட எமது திசையை நாம் மாற்ற வேண்டும். நாம் மாறினால் இறைவன் இயேசுவை ஒருவர் ஒருவரில் சந்திக்கும் வாய்ப்புக்கள் உருவாகும்.

எமது மனச்சான்று என்ற திசைகாட்டி எப்போதும் வடக்கு நோக்குவது போன்று நாமும் இறைவன்பால் ஈர்க்கப்பட்டு வாழ்வோமானால் நமது நாடு மறுமலர்ச்சி காணும் காலம் தொலைவில் இல்லை என்பது திண்ணம். எமது சமுதாயத்தில் முக்கியமாக வடக்கில் மாற்றங்கள் ஆரம்பித்து விட்டது போன்ற அறிகுறிகள் தென்படுகின்றன. மாற்றமே வளர்ச்சிக்கு அறிகுறி. எமது சிந்தனை, சொல், செயலில், நடத்தையில் மாற்றம் வேண்டும். எப்படியும் வாழலாம் என்றல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒழுங்கு வேண்டும். எப்படியான உலகை நாம் காண விரும்புகிறோமோ அது எம் ஒவ்வொருவர் உள்ளத்திலிருந்தும் பிரதிபலிக்க வேண்டும். எமது எண்ண அலைகள், அதிர்வுகள் பலம் வாய்ந்தவை. எமது சூழலையும், சமூகத்தையும் மாற்றும் சக்தி வாய்ந்தவை. வடக்கு மக்களைப் பொறுத்தவரை அதிகளவு மாற்றம் வேண்டியுள்ளது. வன்முறைக் கலாசாரத்திலிருந்து பண்பு முறைக் கலாசாரத்திற்கு நாம் மாற வேண்டும். சின்னாபின்னமாக்கப்பட்ட, பிளவுபட்ட எமது சமூகம் ஒப்புரவாகி ஒற்றுமையுடன் வாழவேண்டும். அது ஒவ்வொரு குடும்பத்திலும் ஊற்றெடுக்க வேண்டும். “குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்” நாம் மாற உலகம் மாறும். இது பெற்றோர், ஆசிரியர்களின் அளப்பரிய கடமை. “மாதா, பிதா, குரு, தெய்வம்” என்பதற்கிணங்க வளர்ந்தோர் அனைவரும் தகுந்த திசை காட்டிகளாக வாழ முயற்சிப்போம். எதையும் நாம் இழந்தாலும் எமது எதிர்கால இளம் சந்ததியினரை நாம் இழக்க முடியாது. இன்றைய இளைஞர் நாளைய தலைவர்கள். தரமான கல்வி, இதயசுத்தியுடைய பண்புக் கலாசாரம் வளர, பாடசாலைகளே தகுந்த தளமாகும். மாணவரிடையே மிருதித்திறன் (Soft Skills) அருகியுள்ளதை உணருகிறோம். அவற்றைத் திரும்பவும் தோன்றச்செய்வோம். “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்: அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.” (லூக்:18: 16) “அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் ஒளியாகிய யேசுவே எம் திசைகாட்டியாக உலகிற்கு வந்தார்.”(யோவான்:1:9) அந்த ஒளியின் திசையிலே நாம் மாறுவோம்.

நாமும் மாற்றமடைந்து இளம் சந்ததியினருக்கும் ஒழுங்கான திசையைக் காட்டுவோம். ஞானிகள் தம் திசையை மாற்றியதால் இயேசுவைச் சந்தித்தனர். நாமும் அடுத்தவரில் இறைவன் யேசுவைச் சந்திக்க கிறிஸ்து பிறப்பு விழா வழிகாட்டவேண்டும். விழாவிற்கு ஆயத்தமாகும் நாட்களில் பிறருடன் ஒப்புரவாகுவோம். ஒத்துழைப்போம், ஒற்றுமையுடன் எமது நேரம், ஆற்றல்கள், திறன்களைப் பகிர்ந்து வாழுவோம். அப்போது தான் கிறிஸ்து யேசுவை அயலவர்களில் நாம் சந்திக்க முடியும். மூன்று ஞானிகளைப் போன்று அவரின் ஒளியைப் பின்பற்றி எமது நாளாந்த வாழ்வில் யேசுவை அடுத்தவர்களில் சந்திப்போம். எமது வாழ்வை அழகான வாழ்வாக மாற்றி, புத்துணர்வுடனும், புது எழுச்சியுடனும் வாழ்ந்து, வளமான நாட்டைக் கட்டியெழுப்ப, ஒளியாக வந்த இறைவன் இயேசு காட்டிய வழியில் பயணிப்போம்.

**“என் மக்களாகிய இஸ்ராயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார் (மத்: 2: 6) எமது நாட்டில் அண்மையில் நிறைவு பெற்ற தேர்தல் முடிவு, மறைந்த அமைதியை, மகிழ்ச்சியைத் திரும்பவும் மக்களுக்கு அளிக்கும் உத்தரவாதமாகத் தோன்றியுள்ளது. தரமான, தகைமை பெற்ற, தகுதி வாய்ந்த திசைகாட்டி மக்களை விழிப்படையச் செய்து வழிப்படுத்தக் கிடைத்தமை எமது மக்களுக்குக் கிடைத்த பெரும் ஆசிர்வாதம் என்று தான் மக்கள் உணருகின்றனர். இத்திசைகாட்டி மறைந்த சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம், மனித மாண்பு, அன்பு, நீதி, உண்மை, நேர்மைக்கு வழிகாட்டுகின்றது. ஏரோதரசனிடமிருந்து தப்பித்த ஞானிகள் போன்று எமது நாட்டு மக்களும் புதிய திசைகாட்டி மூலம் விடுதலையை, உணரத்தொடங்கியுள்ளனர்.”**

## இயேசு பிறப்பினிலே

வார்த்தை மனுவாய் உலகினிலே
வந்திடும் மாதம் மார்கழியாம்
நேர்மை வழியைக் காட்டிடவே
நேயன் நம்மைத் தேடிவந்தார்
ஆர்வம் கொண்டே பாலகனை
அன்பாய் நாடிச் சென்றிடுவோம்
தீர்வை நாளின் நல்வாழ்வை
திருந்தி நாமும் பெற்றிடவே!

ஊனக் கண்ணைத் திறந்திடவே
உலகில் வந்த உத்தமரை
ஞான அறிவைப் பெற்றுயர
நலமும் வளமும் தந்திடுவார்
கானக் குயிலின் ஓசையிலே
கருத்தாய் நாமும் போற்றிடவே
வானம் நிறைவாய்ப் பொழிந்திடுமே
மகிழ்வாய் நன்றி கூறிடுவோம்!

குழந்தை இயேசு பிறப்பினிலே
கூடி நாமும் மகிழ்ந்திடவே
மழலை மொழியைத் தினம்கேட்க
மன்னன் நம்மை நோக்கிடுவார்
அழகாய்ப் பூக்கும் பூக்களிலே
அருளை அள்ளிச் சொரிந்திடுவார்
அழகே அன்பன் பாதைதனில்
அள்ள முடியா நன்மைகளே!

குளோரியா ரூபா அன்ரன்
சுவிற்சர்லாந்து

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

தீவனத் தொட்டி என்றால் தற்போதைய நவீன யுகத்தில் புரியாத ஒன்றாக இருக்கும். ஆடு, மாடு, கழுதை, குதிரை போன்ற வீட்டுப் பிராணிகளைப் பராமரிப்பவர்களுக்குத் தீவனத் தொட்டி தவிர்க்க முடியாத ஒரு பயன்பாட்டுப் பெட்டகம் ஆகும். மனிதர்களாகிய நாம் உண்ணுவதற்குப் பயன்படுத்தும் பாத்திரத்தைப் போன்று தீவனத் தொட்டியில் பக்குவமாகத் தீனி போடும் பெட்டகமாக உள்ளது.

பாலக இயேசுவின் பிறப்பையும் அவரது பாலத்துவப் பருவ நிகழ்வுகளையும் அடையாள ரீதியாகச் சித்தரிக்கும் நற்செய்தியாளர் லூக்கா, கிறிஸ்து உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்றபின் கி.பி.70ற்குப் பின்புதான் நூலை எழுதியவர் கிறிஸ்துவின் வாழ்வில் அவரது உயிர்ப்பின் மாட்சியின் ஒளியின் பின்புலத்தில் நிகழ்வுகளைச் சித்தரிக்கிறார். நிச்சயமாக அவர் இயேசுவின் தாய் மரியாவிடமிருந்து ஏராளமான தகவல்களைத் திரட்டி இருந்தார். கிறிஸ்துவின் பிறப்பை எடுத்துக்கூறும் லூக்கா நற்செய்தியாளர், பிள்ளையைத் துணிகளில் பொதிந்து, தீவனத் தொட்டியில் கிடத்தினார் (லூக்கா 2:7).

மேலும், குழந்தையைத் துணிகளில் சுற்றி, தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். “இதுவே உங்களுக்கு அடையாளம்” (லூக்கா 2:12) என்று ஆண்டவரின் தூதர் இடையர்களுக்குக் கூறினார். மேலும், இடையர்கள் “விரைந்து சென்று, மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள்” (லூக்கா 2:16).

வரவிருக்கும் மீட்பர் பற்றி முன்னுரைத்த எசாயா இறைமனித உறவு பற்றிக் கூறும்பொழுது, “காளை தன் உடமையாளனை அறிந்து கொள்கிறது: கழுதை தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் தெரிந்து கொள்கிறது. ஆனால், இஸ்ராயேலோ என்னை அறிந்து கொள்ள வில்லை: என் மக்களோ என்னைப் புரிந்து கொள்ளவில்லை”(எசாயா 1:3). இவ்வாறு தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களே தம் மீட்பரை அறிந்து கொள்ளவும்

# தீவனத் தொட்டியில் குழந்தை இயேசு



அருட் பணி ஜீவா போல் அ.ம.தி.

இல்லை. புரிந்து கொள்ளவும் இல்லை. இது மனித வரலாற்றில் நாம் புரியும் குற்றமாகும்.

ஆனால், இடையர்கள் எளிமையான திறந்த மனம் கொண்டவர்கள். தீவனத் தொட்டியில் படுக்கை கொண்ட தமது மீட்பரை இனம் கண்டு கொண்டார்கள். வானதூதரின் செய்தி கேட்டு, இறை வாழ்வை நோக்கிப் பயணிக்கும் புதிய சமூகத்தின் பிரதிநிதிகள் இவ் இடையர்களே ஆவர்.

ஊழல்களுக்கும் பணம், செல்வாக்குப் போன்ற பேராசைகளுக்கும் களியாட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் மனிதர்களுக்கு இறைவாழ்வின் கதவுகள் மூடப்பட்டு விடுகின்றன. ஏனெனில், மனித இதயங்களில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

தற்காலத்தில் கிறிஸ்து பிறப்புக் குடிலில் ஆடு, மாடு, கழுதை போன்ற மிருகங்களைக் காட்சிப்படுத்துவது எசாயாவின் செய்தியைப் பிரதி பலித்து, கிறிஸ்துவை நம் மீட்பராகப் பிறக்கவைக்க வேண்டும் என்று அறைகூவல் விடுகிறது.

தீவனத் தொட்டியில் காட்சி தரும் மழலைச் செல்வம் இயேசு பாலகன் பிறக்கும் பொழுதே இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

அதாவது, வாழ்வு தரும் உணவு நானே என்று கூறிய இயேசு இவ்வுலகின் மீட்பிற்காகத் தம்மை முழுமையாக ஈகைசெய்தவர். இயேசுவை எம் மீட்பராக ஏற்றுக் கொள்ளல் என்பது கிறிஸ்துவின் உடலை உட்கொண்டு, தியாகப் பலியின் தொடர்ச்சியாக எம்மை அயலவர்க்கு ஈகை செய்வதே ஆகும். கிறிஸ்மஸ் காலத்தில் நாம் பரிசில்கள் வழங்கி, நம் மழலைச் செல்வங்களையும் அன்பர்கள், உறவுகளையும் மகிழ்விக்கிறோம்.

அதே வேளையில் எம் சமூகங்களில் இருக்கும் ஏழைகளையும் தூரவிடப்பட்டவர்களையும் சகோதரத்துவ உணர்வோடு அரவணைத்து, பிறரன்புப் பணிகளால் அனைவரது விடுதலைக்காகவும் உழைப்பதே உண்மையான கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டமாகும்.

# ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து



# உலக விடுதலை நாயகன்

அலைமோதும் ஆசைகளோடு இன்றைய மனிதர்கள் அலைந்து திரிவதைப் பார்க்கின்றோம். உனக்கு மீட்பு அளிக்கின்றேன். உனக்கு விடுதலை தருகின்றேன். என்னிடம் வா என்று வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி, அலைபேசி, இன்டர்நெட், சினிமா, சீடி இவை எல்லாம் ஒருபுறம். புகை பிடியுங்கள், மது அருந்துங்கள், போதைப் பொருட்களைப் பயன் படுத்துங்கள். விரும்புவதையெல்லாம் அனுபவியுங்கள் அப்போது நீங்கள் விரும்பும் விடுதலை உங்களைத்தேடி வரும் என்று விளம்பரம் செய்யும் மனிதர்கள் இன்னொருபுறம்.

ஒருபுறம் நெருப்பு மறுபுறம் நாகம். மனிதர்கள் எறும்பாய் தத்தளித்து துரும்பாய் தேய்ந்து கொண்டிருக்கும் நிலையை நாம் கண்கூடாய்க் காண்கின்றோம். இப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து நமக்கு மீட்பே கிடையாது என ஏங்கும் இதயங்களுக்கு, இறைவாக்கினர் ஏசாயா ஆறுதல் கூறுகின்றார். ‘ஒரு குழந்தை பிறந்துள்ளார், ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும், அவரது பெயரோ வியத்தகு ஆலோசகர் வலிமை மிகு இறைவன் என்றுமுள்ள தந்தை அமைதியின் அரசர் என்று அழைக்கப்படுபவர் என்று எசாயா (9:6) சுட்டிக் காட்டும் குழந்தை யார்? புதிய ஏற்பாட்டில் புனித லூக்கா நற்செய்தியில் கூறுவது போல “நம் நடுவே பிறந்திருக்கும் ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பரே அக்குழந்தை” (லூக் 2:11) இனி நமக்குத் துன்பமில்லை, துயர மில்லை இன்னல் இல்லை இடையூறு இல்லை என புனித பவுல் தீத்துவுக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவது போல “,இயேசு உலக மக்கள் அனைவருக்கும் மீட்பளிக்கும் அருளாகச் செயற்படப் பிறந்திருக்கின்றார். துன்பத்திற்கும் வேதனைக்கு புதிய தொரு அர்த்தத்தினைக் கொடுத்து உலகைப் பாவத்திலிருந்து மீட்க அவதரித்த ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவே இறைவனின் திருமகனாவார்.” இறைவனைப் பற்றி இன்னும் அதிகமாக எடுத்துரைத்து விடுதலை வழியைக் காட்டி ஆண்டவர் கிறிஸ்துவே தாம் இறைவனின் திருமகன் என்பதனைத் தெளிவாக எண்பித்துள்ளார்.

மனிதன் முதன் முதலில் பாவம் செய்த உடனேயே இயேசுவின் வருகை இறைவனால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. “உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்துஉன் தலையைக் காயப்படுத்தும், நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்” எனத் தொடக்க நூலில் (3:15) இறைவனால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. தவறு யாருக்கு எதிராக இழைக்கப்படுகிறதோ அவர்களது உயர் நிலை காரணமாக அதன் கனாகனம் அதிகரிக்கப்படுகின்றது. இதனால் இறைவனுக்கு எதிராக இழைக்கப்படும் தவறுக்காகப் பரிகாரம் செய்வது மனிதனால் முடியாத காரியமாகும். இதனை இறைவனுக்கு ஒப்பானவர் ஒருவராலேயே செய்திட இயலும், இதற்காக முன்வந்தவரே ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து. அவர் மனுவுரு எடுத்து இவ்வுலகில் அவதரித்தார். இயேசு என்னும் பெயர் மீட்பர் என பொருள் படும். கிறிஸ்து என்னும் பெயர் அருட்பொழிவு பெற்றவர் அல்லது அபிஷேகம் பெற்றவர் எனப் பொருள் படும். அபிஷேகம் என்பது அர்ப்பணிக்கபடுதலினதும் பெலப்படுதலினதும் அடையாளம் ஆகும்.

இவ்வாறு அபிஷேகம் செய்யப்பட்ட இயேசுக்கிறிஸ்து இந்த நவீன காலத்தில் அழகான குடிலில் பிறப்பதை விட நமது உள்ளத்தில் பிறக்க விரும்புகின்றார். நாம் நமது இதயக்கதவுகளைத் திறந்தால் அவர் உள்ளே வருவார், நம்முடன் விருந்துண்பார். கிறிஸ்துவுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்றால் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் “சிறிய சகோதர சகோதரிகளுக்கு நாம் செய்வதை எல்லாம் இயேசுவுக்கே செய்கிறோம் என புனித மத்தேயு(25:40) தனது நற்செய்தியில் கூறுகின்றார். எனவே நாம் சிறப்பாக வீதி ஓரங்களில் இருக்கும் ஏழை எளியவருக்கு உதவி செய்ய வேண்டும்.

இன்று கிறிஸ்து பிறப்பதற்கு நம் உள்ளத்தில் இடமுண்டா? அவர் கொண்டு வந்த அமைதியை நிலை நாட்டுகின்றோமா? ஏழை எளிய-வரை தேடிச்சென்று அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுகின்றோமா? இக் கேள்விக்கு நாம் கூறும் பதிலைப் பொறுத்தே நமது கிறிஸ்து பிறப்பு விழா பொருளுடையதாக அமையும் எனவே இயேசு எப்படி எமக்காக அவர் தனது உயிரை ஒப்படைக்க இவ் உலகத்திற்கு விடுதலை நாயகனாக உதித்துள்ளது போல நாமும் இவ்வுலகில் எப்போது பிறருக்காக வாழ உயிர்த்தெழப் போகின்றோம்? விண்ணகத்தில் கடவுளுக்கு மகிமையும் மண்ணகத்தில் மனிதருக்கு அமைதியும் உரித்தாகுக. உங்கள் அனைவருக்கும் எனது இனிய கிறிஸ்து பிறப்பு நல் வாழ்த்துக்கள்.

ச.றொகான்
ஆச்சிரமம், யாழ்ப்பாணம்

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



## அன்னை மைந்தன்



வைக்கோல் புல்லணையில்
வைரம் நன்று மிளிர்கிறதே!
மாட்டு குடிலினிலே
மாணிக்கம் ஒன்று ஒளிர்கிறதே

மரியின் மடிதனிலே
மரகதம் சிரிக்கிறதே!
மார்கழிப் பனி வாடையிலே
மாதவம் ஒன்று உதித்துள்ளதே!

வானதூதர்களின் வாழ்த்திசையிலே
வானகம் இன்று துயில்கின்றதே!
நள்ளிரவின் இருளினிலே
வெள்ளி நிலவு உதித்துள்ளதே!

பெத்லகேமில் பேரொளியாய்
பௌர்ணமி ஒன்று சிரிக்கின்றதே!
வெள்ளைச் சிரிப்பினிலே
வெண்பனி ஒன்று மிளிர்கிறதே!

பாவிகளை மீட்டெடுக்க
பாரினிலே பிறந்துள்ளதே!
பாலகனாய் புன்சிரிப்பில்
பாச மழை பொழிகிறதே!

வானவனை நாம் வாழ்த்தியே மகிழ்ந்திடுவோம்
கானங்கள் பாடியே புகழ்ந்திடுவோம்!
தூய நல் இதயங்களை
தூயவனுக்கு நாம் பரிசளிப்போம்!
கிறிஸ்து பிறப்பு விழாவினை
தூய்மையாய் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்

**சி. டிலக்ஷனா**

## என் உள்ளத்தில் மலர்ந்தாய்

என் உள்ளத்தில் பிறந்த
தெய்வீக மன்னவா - எம்
வாழ்வில் அன்பைப் போதிக்க அன்பாய்
மலர்ந்த பாலகனே

பாவியை அணைக்க பிஞ்சுக் கரங்களுடன்
மார்கழி இரவில் எம் வாழ்வில்
ஒளியாய் பிறந்த பாலனே
உம் வருகையால் எம் பாவம் துடைப்பீர்

புதிய உணவுகளுடன் - புதுப் படைப்பாய்
நாம் வாழ தருவீர் உம் ஆசீர்கள்
உம் பிறப்பின் யூபிலி ஆண்டில் - யாம்
உம் வழிகளில் நடக்க - அன்பின்
சமுகமாய் இணைந்து எதிர்நோக்கின் பயணிகள்
வாழ வரம் தருவாய் - எம்
உள்ளத்தில் மலர்ந்த தெய்வீக பாலகா...

**அருட்சகோதரி மரியசுதர்சனா CR**

## உண்மையின் சாட்சிகள்



கடந்து விட்ட
பல மிலேனியக்
காலனித்துவத்தின்
கருத்தாடல்களுக்குள்
இன்று வெற்றியின்
மக்களாகச் சரித்திரம்
படைத்திருக்கும்
அந்த விடுதலையின்
யதார்த்தப் பார்வைக்குள்
வெற்றியின் அரசு
உள்ளதா?
என எண்ணத்
தோன்றுகிறது
அன்று
யூதேயா தேசத்தில் ஓர்
மாடடைக் குடிலில்
அருளும், உண்மையும்
வெளிப்படுத்தப்பட்ட
ஓர் அரசு எமக்கு
வெற்றியின் அரசாகக்
கிடைத்தது ஏன்?
உண்மைக்குச்
சான்று பகிரும்
கூட்டொருங்கியக்கத்
திருஅவையாக
வாழவேண்டும்
என்றபடியால்...

## ஆட்சியும் காட்சியும் புதிய விடியலை நோக்கி



ஆட்சி மாற்றத்தால் இன்று
அதிசய மிக்க நம் நாட்டில்
மீட்சியாக முன்னேற
மக்கள் சாட்சியாக பல
காட்சிகள் நடக்கிறது
வீழ்ச்சி நாம் அடைந்ததற்கு
விடைகள் பல கிடைக்கிறது

அரசியல் ஆட்டத்தால்
அழிவுகள் ஏராளம்
அபகரிப்புகள் தாராளம்
ஊழல் இலஞ்சம் மோசடி
உதவாத செய்கைகளால்
நாடு நலிவடைந்ததை
நாமின்று காண்கின்றோம்

வாடும் மலர்களாக மக்கள்
வாழ்வு இருப்பதை நாளும்
நாம் நன்றாய்க் காண்கின்றோம்

ஆளுமைமிக்க
அதிகாரத்தால் இன்று
வாழ்வியல் வளப்படுகிறது
தோழமைமிக்க தொண்டுகளால்
நீதி நியாயம் நாட்டில்
நிமிர்ந்து நிற்கிறது
உதயம் தேடும் இதயங்களுக்கு
வாழும் வாழ்வில்
விடிவு கிடைக்கிறது

வளமான நம்நாடு
வளப்புமிக்க நாடாகும்
நாட்டில் நல்லாட்சி நாளும்
வீட்டில் இருந்து
நாடு சுபிட்சமாகும்.
வீடும் வெளிச்சமாகும்
மக்கள் மனங்களிலே
மகிழ்ச்சி பொங்கி விடும்
வாழ்வில் என்றென்றும்
மலர்ச்சி கிடைத்து விடும்
இப் புதிய வருடத்தில்

**அலோசியஸ் ஜெயநாயகம் நோயல் டானியல்,**

## நம்பிக்கையின் திருப்பயணிகளாய் ஒன்றிணைவோம் பாலன் வரவினால்



பாலகன் வரவினால்....
அமைதி மண்ணில் மலர்ந்திடவே
அன்பு உறவில் மாந்தர் நிலைத்திடவே
அருகி வரும் ஆன்மீகம் மிளிர்ந்திடவே
அரவணைத்துக் காத்திட பிறந்திடு பாலகா
அடிமைத்தனங்கள் ஒழிந்திடவே
ஆணவம் அற்ற வாழ்வு மலர்ந்திடவும்
அல்லற்படும் மக்கள் துயர் துடைத்திடவும்
அகமதில் மீட்புக் கிடைத்திடவும் வந்திடு பாலகா
அதிகாலை பனி முதல் அந்திமதிக் குளிர் வரை
தந்தி அறுந்த விணையா நொந்து வந்து சோகப்பட்டு
சோற்றுக்கு அரிசி வாங்க தோடு விற்றுக் காசு வாங்கும்
பாழ்பட்ட விலையேற்ற மாற்றம் ஒன்று கண்டிடவே
- வந்திடு பாலகா
இயற்கையின் சீற்றமதால் இன்னல்கள் பலவுண்டு
காணுமிடமெல்லாம் தண்ணீர்க் காடாகி
சமையலுக்கு வழியின்றி நடுவழியில் நின்றனரே
பள்ளிமுதல் ஆலயம் வரை கரைகாணா
வெள்ளம் வந்து தவித்திடும் வேளையதில்
வழிகாட்டும் வள்ளலாய் வந்திடு பாலகா
கடவுள் தந்த வாழ்வு என்னும் கொடையதனை
வாழ மனம் இன்றி தான்தோன்றித் தனமாக
தலைமுடிக்கு நாலு கலர் டை அடித்து
தண்டவாளம் போல பல கோடடித்து
இமைக்கு இரண்டு கோடும் போட்டு
இன்பமுற்று வாழும் இளம் தலைமுறையினர்
ஞானக்கண் திறந்திட வந்திடு பாலகா
ஜபுறோவும் லிவ்ஸ்ரிக்கும் ஆள்நிறமாற
வையிற் கிறீமும்
ஆடையின் நிறத்திற்கு அணிகலனும்
ஆளுக்கொரு கைப்பையும் அலறவிடும்
கைபேசியுடன் அல்லலுறும் மகளிர்க்கும்
ஆன்மீக வாஞ்சயினை வழங்கிட
வந்திடு பாலகா
மழலைகள் நிலாக்காட்டி சோறூட்டிய காலம் கரையேறி
ஐபோனில் பாட்டுப் போட்டு பக்குவமாய்
உணவூட்டும் காலமதிலும் சின்னஞ் சிறிசுகளின்
சிறப்பான உணவு என
பீசா பர்கர் கொத்து றைஸ் என
விரைவுணவை உண்டு
ஆயுள் குறையும் காலமதில்
வாழ்வளிக்கும் வசந்தமாய் வந்திடு பாலகா
நம்பிக்கையின் திருப்பயணிகளாய்...
எதிர்நோக்கு நம்பிக்கை அன்பினை உணர்ந்திடுவோம்
அன்பின் சமுகமாய் வாழ்ந்திடுவோம்
ஆண்டவர் வார்த்தையில் நிலைத்திடுவோம்
அகமதில் மனமதை மாற்றிடுவோம்
இறைநம்பிக்கையின் பயணிகளாகிடுவோம்
அழிந்திடும் மாயைகள் தகர்த்திடுவோம்
ஆணவம் களைந்து வாழ்ந்திடுவோம்
பொய்மை நிறைந்த வாழ்வதினில்
என்றும் நன்மைகள் புரிந்து வாழ்ந்திடுவோம்
நட்பினில் வாழ்வோம் பகிர்தலில் வளர்வோம்
இயேசுவின் சாட்சிகள் ஆகிடுவோம் - பாரினில்
நம்பிக்கை வாழ்வை அமைத்திடுவோம்
துன்பங்கள் அலைபோல் வந்திடினும் --நாம்
தூயவன் துணை கொண்டு வாழ்ந்திடுவோம்
பகைமைகள் நிறைந்த உலகதிலே - தினமும்
பரிவுடன் உம் பணி புரிந்திடுவோம்
உண்மையாய் வாழ்வோம் பிறர் உறவில் நிலைப்போம்
உயர்வு தாழ்வுகள் களைந்து ஒரு
குலமாய் நாம் வாழ்ந்திடுவோம்
யூபிலி ஆண்டிதுவே .. யூபிலி
ஆண்டில் பயணித்திடுவோம்
மன்னிப்பும் இரக்கமும் மீண்டுமாய்ப் பெற்றிட
மனுமகன் தந்த ஆசிகளுக்காய்
நன்றி கூறும் நாளிதுவே
இறைவன் தந்த இனிய நாளிதுவே
யூபிலி ஆண்டதில் ஓய்வும் ஒன்றல்லோ
உழைத்துக் களைத்து உயர்வாய் வாழ்வதும்
உகந்த வேளை ஓய்வாய் இருப்பதும்
தனிமனித வாழ்விலும் குடும்ப வாழ்விலும்
பணிபுரியும் அனைவருக்கும் உகந்த ஒன்று
கடவுள் தந்த கொடைகளின் சிறப்பிதுவே
யூபிலி ஆண்டதிலே திரும்பிப் பார்
கடந்த கால வாழ்வினையும்
கடந்து வந்த பாதையையும் கனிவாகத் திரும்பிப்பார்
ஒவ்வொரு நாளும் உன்னை நீ அறிந்திடு
இலக்கு நோக்கிப் பயணிக்க இனிய நாள் இதுவாகும்
ஆன்ம சோதனை உயர்வன்றோ
புதிதாய் நாம் மீண்டெழுவோம்
புதிய யுகம் படைத்திடுவோம்
கடவுளின் படைப்பதிலே மகிழ்வுடன்
வாழ்ந்திடுவோம்
கடன் பட்ட நிலபுலன் முதல் காசு பொருள்
அனைத்தினையும்
கனிவோடு வழக்கிடுவோம் கருணையுடன்
வாழ்ந்திடுவோம்
உறவுகளை சரிசெய்வோம் உயிர்களை
மதித்திடுவோம்
மன்னிப்பைப் பெற்றிடுவோம்
இறையுறவில் வளர்ந்திடுவோம்
பிறரன்பு பேணிடுவோம் பகைமைகளை
மன்னித்து மறந்திடுவோம்
இயற்கையை நேசிப்போம் இயன்றவரை
காத்திடுவோம்
அனைவரையும் இணைத்திடுவோம்
அன்புச் சமூகம் ஆகிடுவோம்
பயணிப்போம் பயணிப்போம்
வசந்த காலம் நோக்கியே
கடவுளது ஆசியைக் கனிவாய்ப் பெற்றிடவே
கூட்டொருங்கிய திரு அவையாய்
கூடி நாமும் வாழ்ந்திடுவோம்
குவலயம் சிறக்க ஒன்றிணைந்து
பயணிப்போம்
யூபிலி அருளினை அகமதில் பெற்றிடுவோம்
இறையாட்சிப் பணிக்காக அனைவரும்
இணைந்திடுவோம்
இறைவனின் உறவில் இணைந்திடுவோம்

**யே. அனுஸ்டதாஸ்**

## பேரருளின் பிறப்பு



மானுட விடியலுக்காய்
மரியவள் மடி தர
மனிதனாய்
மரித்திடத் தோன்றினான்
மன்னவன் எம்மிடையே
இன்று...

பிறப்பிப்பவன் பிறந்திட்டான்
அது கண்டு
மரண பயத்தில்
மரணம்...

ஆண்டவன் ஒளியின்
வெப்பத்தில்
முகம் இருட்டி விட்டது
இருளுக்கும்

தேடி வந்து - எம்
உளமதில்
இடம் தேடுகிறான்
தூய்மையாய் இருந்திடின்
அங்கு சதாகாலமும்
துயிலுவான்

தூதனவன் உரைகேட்டு-எம்
தாயவள் ஆம் என்றிட
தூயவன் தாய் வழியாய்த்
தரணியைத் தரிசித்தான்
இன்று

மானுடா...
வருடாந்தம் வருகிறது நத்தார்
விழாக்கண்டு மகிழ்ந்திட அல்ல
ஆண்டவன் அன்பை அறிந்திட
அவனண்டை மீண்டும் திரும்பிட

உணர்ந்திடுவாய் மனிதா - உன்
உள்ளத்தில்
உண்மை கண்டு திருந்துவாய்
உன்னையே நாடியவன்
அவலுடன்
உனக்காகவே காத்திருக்கின்றான்

அலகையின்
ஆசை மொழி கேட்டு
ஆண்டவன் அன்பை மறந்து
பாதாளத்தில்
சூழ்ந்துபோன அகிலத்தை
- அப்படியே
விட்டு விடுவாரோ இறைவன்
இல்லை மானுடா - நீ
இன்றும் என் பிள்ளை தான்
பாவத்தில் வீழ்ந்திட்டாய்
பதறாதே
நான் உன் தந்தையடா

வீழ்ந்திடினும்
பாவத்தில் மூழ்கிடினும்
முடிந்தவரை முயன்றுன்னை
முன்னேற்றுவேன்
தூக்குவன் உனை - என்
கரமதில் தாங்குவேன்

என்ன செய்திட்டாய்
நீ பாவமா...?
இது ஒரு பொருட்டா எனக்கு
என்னை மறந்திட்டாய்
விலகிட்டாய் பரவாயில்லை
உனை மறப்பவன்
நாளில்லையே

ஒருபோதும் உனை மறவேன்
என் பதம்
மீண்டும் அழைப்பேன்
என்றுரைத்தவன் எமக்காய் - இன்று
ஏழையாய் தொழுவத்தில்

**எஸ்.ஜே.டினேஸ்**

## பார் புகழும் பாலன் பிறப்பு

உலகுறங்கும் நேரத்தில்
கண்ணயரும் இரவினிலே
களிப்பூட்டும் காகிதமாய் - வானில்
வால் முளைத்த தாரகை
தோன்றியதே
இடையர்கள் இன்பமுற
கால் நடைகள் களிப்புற
கொட்டும் பனியினிலே
கொட்டிலில் உதித்த பேரொளியே
இயற்கை இன்னிசை பாட
மாந்தர்கள் மகிழ்ந்திட
மனித வாழ்வில் ஒளி பிறக்க
மழலை பாலகன் பாரினில்
உதித்தார்
அடிமை வாழ்வை
அடியோடழிக்க இருள்
நீங்கி ஒளி பிறக்க
கருணையின் உருவினிலே
பிறந்தார் பெத்லகேமிலே
சொந்தங்கள் இணைந்திடவே
சோகங்கள் மறைந்திடவே
களிப்பூட்டும் காட்சியாய்
பாலகன் அன்னை மரி
மடியிலே ...



**வலன்ரைன் வலன்சன்**
**அருள் ஆச்சிரமம்.**
**யாழ்ப்பாணம்**

## அன்னை மைந்தன்

வைக்கோல் புல்லணையில்
வைரம் நன்று மிளிர்கிறதே!
மாட்டுக் குடிலினிலே
மாணிக்கம் ஒன்று ஒளிர்கிறதே

மரியின் மடிதனிலே
மரகதம் சிரிக்கிறதே!
மார்கழி பனி வாடையிலே
மாதவம் ஒன்று உதித்துள்ளதே!

வானதூதர்களின்
வாழ்த்திசையிலே
வானகம் இன்று துயில்கின்றதே!
நள்ளிரவின் இருளினிலே
வெள்ளி நிலவு உதித்துள்ளதே!

பெத்லகேமில் பேரொளியாம்
பௌர்ணமி ஒன்று சிரிக்கின்றதே!
வெள்ளைச் சிரிப்பினிலே
வெண்பனி ஒன்று மிளிர்கின்றதே!

பாவிகளை மீட்டெடுக்க
பாரினிலே பிறந்துள்ளதே!
பாலகனாய் புன்சிரிப்பில்
பாச மழை பொழிகின்றதே!

வானவனை நாம்
வாழ்த்தியே மகிழ்ந்திடுவோம்!
தூய நல் இதயங்களை
தூயவனுக்கு நாம் பரிசளிப்போம்!

கிறிஸ்து பிறப்பு விழாவினை
தூய்மையாள் கொண்டாடி
மகிழ்ந்திடுவோம்

**சி.டிலக்ஷனா**





வீசிச் சுழன்ற
வாளொன்று
குத்தி நின்றது
திரையில்...

குருதி குடித்த
வெளியில்
அவன்
கவச உடைகள்
கழன்று
தரையில் வீழ்ந்து
கிடந்தன...

அமைதி தேடிய
வெண் புறாக்கள்
மெல்லப் பறக்கத்
தொடங்கின...
அந்தச் செய்தி கேட்டு
கலங்கிய எருசலேம்கள்

பின் அமைதியாயிற்று...

உலகிற்கு ஒரு
மெசியா
அவனியில் அவதரித்தார்...

என்ற செய்தி
ஞானிகள் சொன்னதால்...

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## கீழ்த்திசை ஞானிகளின் பயணம்



மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள் ரஷ்ய நாட்டு ஸ்புட்னிக் என்ற செயற்கைக் கோள் தான். 1957ம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் 04ம் திகதி விண்ணில் ஏவப்பட்டதும், அந்த விண்வெளி யுகம் ஆரம்பமாகியது. இன்று அறிவி யல் வளர்ச்சிக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் வழங்குகின்ற விண் வெளி மையமாக இந்தப் புவி நிலை வட்ட வானிலை செயற்கைக் கோள் கள் காணப்படுகின்றன.

இற்றைக்கு 2000ம் ஆண்டு களுக்கு முன்பு விண்வெளி ஆராய்ச்சியில் இந்த ஞானிகள் ஈடுபட்டிருந்தனர். வளிமண்டல நிகழ்வுகள், நட்சத்திரக் கூட்டங்கள், கோள்கள் என்பனவற்றின் நிலை களையெல்லாம் இவர்கள் கனவில் விளக்கம் கொடுக்கக்கூடியவர்க ளாக இருந்தார்கள். கடவுள் இவர் களுக்குக் கொடுத்த அந்த ஞான அறிவால் இவர்கள் செயற்பட்டார்கள். இவர்கள் மானிட வாழ்வின் வழிக- ளைக் காட்டும் உண்மையின் ஒளி யைத் தேடும் மனிதர்களாக ஞானி கள் இருந்தார்கள்.

இறைவாக்கினர்கள் கூறிய வைகளையெல்லாம் அறிந்திருந்தார் கள். அந்த வகையில் இவ்வுலகிற்கு ஒரு விடுதலையின் மீட்பின் வழி யொன்று இருக்கிறதென்பதை அறிந் திருந்தார்கள். அந்த வழிதான் அவர்க ளுக்கு விண்மீனாகத் தோன்றி யது. உடனே அவர்கள் கீழ்த்திசை யில் இருந்து பயணத்தை ஆரம்பித் தார்கள். அப்போது அந்த விண்மீன் ஒரு அரசரை, உலகத்தின் மீட்பரைத் தெளிவுபடுத்தியது.

யூதேயாவிலுள்ள பெத்ல கேம் என்னும் ஊரில் இயேசு பிறந்த பொழுது அந்த ஞானிகள் ஜெருசலே முக்கு வந்து "யூதருக்கு அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரு டைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந் தோம்" என்றனர். இதைக் கேட்ட ரும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு ஜெருசலேம் முழுவதும் கலங்கிற்று.

இந்த அரசனுடைய அதிர்ச்சிக் கலக்கம் ஒருவகை யில் ஞானிகளையே குழப் பத்திற்குள்ளாக்கியிருக்க வேண் டும். அவர்களும் இவருடைய நடவடிக்கைகளைப் பற்றிச் சிந் திக்கலானார்கள். தன் சூழ்ச்சி யான சிந்தனையும், சதி முயற்சியும் அந்த ஞானிகளி டம் பலிக்கும் என்று நினைத்தான்.

அவன் எல்லாத் தலை மைக் குருக்களை யும்,மறை நூல் அறிஞர் களையும் அழைத்து, மெசியா எங்கே பிறப் பார் என்று விசாரித் தான். அவர்கள் இறைவாக்கினர் எழுதியுள்ளபடி யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறப்பார் என்று கூறி னார்கள். பின்பு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்து வந்து விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். காலத்தைப் பற்றிய தெளிவு அவனுக்குக் கிடைத்த பின்பு அவன் "நீங்கள் சென்று குழந் தையைக் குறித்து திட்டவட்டமாய் கேட்டு எனக்கு அறிவியுங்கள்" நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்" என்று கூறி அவர்களைப் பெத்லேகேமுக்கு அனுப்பி வைத்தான்.

அவர்கள் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கையில் முன்பு தோன் றிய விண்மீன் மீண்டும் தோன்றி அவர் களுக்குப் பின்னே சென்று கொண்டி ருந்தது. அங்கே குழந்தை இருந்த இடத்துக்கு மேல் நின்றதும் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள்.

அவர்கள் வீட்டிற்குள் சென்று குழந்தையையும் தாய் மரியாவையும் கண்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தாங்கள் கொண்டு வந்த பொன், சாம் பிராணி, வெள்ளைப் போளம் என்பன வற்றைக் காணிக்கையாக்கினார்கள். பின் ஏரோதிடம் திரும்பிப்போகவேண்டா மென்று கனவில் எச்சரிக்கப்பட்டு, அவர் கள் வேறு பாதையால் நாடு திரும்பினர்.

பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அந்த ஞானிகள் குழந்தை இயேசுவைத் தரிசிக்க வந்தது போன்று நாமும் எமது வாழ்வில் சொல்லமுடியாத பல துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள், அழிவுகள் மத்தியில் எம் வாழ்வை நகர்த்திக் கொண்டு செல்கின்றோம். அந்த மீட் பரைத் தேடிச் செல்கின்றோம். அந்த மீட்பின் செய்தியை, விடுதலை யின் செய்தியை நாம் கண்டு கொள்ளவேண்டுமென்றால் அந்த உண்மையின் ஒளியை எம் வாழ்வில் கண்டுகொள்ள, அந்த மாடடை குடில் நோக்கிச் செல்வோம். குழந்தை இயேசுவைச் சந்திப்போம்.

எம்.யோண் பற்றிக்

## எம் உள்ளங்களை பாலகனுறங்கும் தீவனத் தொட்டிகளாக்குவோம்

விஞ்ஞானம் வளர்ந்து உலக உருண் டையானது உள்ளங்கைக்குள் சுருங்கிவிட்ட இன் றைய இருபத்தோராம் நூற்றாண்டில் இயந்திர மய மான வாழ்க்கையில் அடுப்பங்கரை முதல் அண்ட வெளிவரை வியாபித்துவிட்ட நவீனத்தின் வளர்ச்சியி னால் கிறிஸ்தவ வாழ்வும் அதன் பரிணாமங்களும் நிறையவே மாறிவிட்டன. இயேசுவின் பிறப்பினால் மனுக்குலம் முழுவதும் புதிய வரலாறு ஒன்றின் உதயத்தைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந் தது. மனுமகன் மனிதனாக வந்துதித்த நாளையே கிறிஸ்மஸ் விழாவாகக் கொண்டாடுகின்றோம்.

'வாக்கு மனிதனானார் நம்மிடையே குடி கொண்டார்'( யோவான் 1:14) என திருவிவி லியத்தில் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைவாக தியா கம், கருணை என்பவற்றை எடுத்துக்காட்டும் காலத்தின் கண்ணாடி யாக இயேசுவின் பிறப்பு அமைந்துள்ளது.இறைமகன் இயேசு நம்மோடு இருக்கிறார் என்பதையே கிறிஸ்மஸ் பண்டிகை உணர்த்துகிறது. இயேசு பாலன் தன்னுடைய பிறப்பின் வழியாகக் கொண்டுவந்த விடுதலை மற்றும் மீட்பை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து அனு பவிக்க வேண்டும். அதுவே உண்மையான மகிழ்ச்சி. ஆகவே, இந்தப் பாலன் பிறப்பானது துன்ப துயரங்கள், நோய்நொடிகள், வறுமை, இயற்கை இடர்கள் அனைத்திலிருந்தும் அனை வருக்கும் விடுதலை தருவதாக அமைய வேண்டும். தற்கால சமூகம் வேண்டி நிற்பது இன, மத பேதத் தினை கருத்திற் கொள்ளாத சமாதானம், மகிழ்ச்சி நிறைந்த தெய்வீகத் தன்மை மற்றும் மனிதத்து வத்துடன் கைகோர்த்த நற்பண்புகள் மிகுந்த ஒரு சூழலையாகும்.

சமகாலத்தில் கிறிஸ்து பிறப்புக் காலம் என்பது எல்லோரது மனதிலும் வார்த்தையால் வடிக்க முடியாத இன்பத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. நத்தார் குடில்களைத் தயாரித்தல், கிறிஸ்மஸ் மரங்களை அலங்கரித்தல் ஒளிவெள்ளங்களால் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரித்தல், புத்தாடைகள் வாங்குதல், புதுப்புதுப் பண்டங்கள் செய்தல் என இவற்றை அடிப்படையாகவும் மையமாகவும் கொண்டு சமகால கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இவையெல்லாம் உலகியல் இன்பங்கள் சார்ந்தும் அதன் நடை முறைப் பிரயோகம் சார்ந்தும் முன்னெடுத் துச் செல்லப்படு கின்றன என்பது நிதர்சனமான உண்மையாகும்.

குழந்தை இயேசு உலகமெங்கும் சென்று என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுங்கள் என்று கூறவில்லை. தெருவோர பிச்சைக்காரரிலும் தனிமையில் வாடும் முதியவரிலும், கவனிப்பற்ற நோயாளிகளிலும், துன்பங்களோடும் வேதனைகளோடும் சிறைகளில் சித்திர வதைப்படுவோர் மத்தியிலும் தான் இன்றும் பிறப்ப தாகப் போதித்ததனை நாம் ஏன் உணர மறுக்கின் றோம்.இயேசுவினுடைய பிறப்பானது விடுதலையையும் சமாதானத்தையும் மட்டுமல்ல பாவத்தின் அடிமையில் வாழ்வோர் விடுதலைபெறவும், ஏழைகள், புறந்தள்ளப் பட்டு ஒதுக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெற்று அனை- வரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் எனும் உயரிய நோக்கத்தோடு இடம்பெற்றதை நாம் உணர வேண்டும். கிறிஸ்மஸ் மரங்கள் வானளவு உயர்ந்தாலும் மனித மனங்கள் மனித மாண்பைஉணர்த்தும் எண்ணக் கருத்துக்களால் உயர்ந்துள்ளதா என்பதை நானும் நீங் களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏழைகள் ஏழை களாகவே என்றும் வாழச் செல்வந்தர்கள் செல்வத் தைப் பெருக்கும் நோக்கோடும் வாழ எப்படி அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட முடியும். வெளி வேடக் கிறிஸ்தவ வாழ்விலிருந்து புதுப்பிறப்பெடுப்போம். 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' (மத்தேயு 25:41)மேலும் ஆரம்பகாலத்தில் கிறிஸ்து பிறப்பு என்பது எளிமையின் வெளிப்பாடாகவே கருதப்பட்டது. இன்றைய சமுதாயம் அதனை மறந்தே செயலாற்று கின்றது. நவீன உலக மாயைகளுக்கு அடிமைப்பட்டு மனித மாண்பினை இழந்து இரக்கமற்ற வர்களாக வாழ்ந்து வருகின்றனர். கிறிஸ்து பிறப்பு விழா சமகாலத்தில் தேவா லயங்களில் ஆரம்பிக்கப்படு வதில்லை. மாறாக மதுபானசாலைகளிலும், அதனோடு இணைந்த களியாட்டங்களோடுமே ஆரம்பிக்கப்படுகின் றது. கிறிஸ்மஸ் பெருவிழாக்காலம், மகிழ்ச்சியின், அன் பின், பகிர்வின் காலம் எனக் கூறுவதுண்டு.விண்ணை யும் மண்ணையும் படைத்த இறைவன் தம்மையே தாழ்த்தி பாவிகளாம் நம்மை மீட்க மனித உருவில் தோன்றினார். இதுவே கிறிஸ்து பிறப்பு விழா வின் மறையுண்மையாகும். இயேசுவின் தத் துவம் நித்தியமானதும் பிரபஞ்சம் தழுவியது மாகும். அத்தோடு அவர் போதித்த சமய நெறிகள் சமூகத்தின் நிலைதன்மைக்கு பங்களிக்கும் பல போதனைகளை கொண்டுள்ளது. ஒருவரது நம்பிக் கைக்கு புறம்பாக நாம் எல்லோரும் எமக்கும் ஒரு வர் மற்றவர்க்கும் இந்த சமூகத்தில் உண்மை யானதும் நீடித்ததுமான ஒரு மாற்றத்தை கொண்டு வரும் ஒரு கடமை உணர்வை கொண்டுள்ளோம்.

இயேசுவின் பிறப்பு அவர் இந்த உலகிற்கு வழங்கிய அன்பு, சகிப்புத்தன்மை, பரஸ்பர புரிந் துணர்வு பற்றிய புதிய போதனைகளுடன் மானிட விடுதலைக்கான வழியையும் காட்டி நிற்கின்றது. 'உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக' (லூக்கா 2:14) என்று வானதூதர் பாடி யது, உள அமைதி தொடக்கம் உலக அமைதி வரைக்கும் என்பதாகும். அமைதியை உருவாக்கு வதே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி என்பதை நாம் உணருகின்ற போது குழுச்சேர்ந்து சதிசெய்து குழிபறிக்கின்ற முயற்ச்சிகள், பல்வேறு முரண் பாடுகள், போட்டி பொறாமைகள் என்பவற்றை எம்மிடமிருந்து அகற்ற முடியும். கிறிஸ்து பிறப்பின் மறையுண்மைகளை உணர்ந்து அதன்பால் வாழ் கின்ற போது நம் மனங்கள் ஒவ்வொன்றும் நம் தீவனத்தொட்டிகளாக மாறும் என்பதில் ஐயமில்லை.

பெத்லகேம் என்பதன் பொருள் 'அப்பத்தின் ஊர்' என்பதாகும். பாலகன் இயேசு பிறந்தவுடன் தீவனத் தொட்டியில் கிடத்தப்படுகின்றார். தீவனத்தொட்டி என்பது விலங்குகள் உணவருந்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றாகும். பாலகன் இயேசு தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்டதன் அர்த்தம் அவர் உலகினர்க்கு உணவாக வந்ததன் வெளிப்பாடு ஆகும் நாங்கள் எவ்வள வும் பிறரிடமிருந்து பெற விருப்பமுடையவர்களாக இருக்கின்றோம் ஆனால் பிறருக்கு உதவுவதில் நாட்ட மற்றவர்களாக இருக்கின்றோம்.

குறிப்பாக தமிழர்கள் நாங்கள் பிறரிடமிருந்து பெற்றுப்பெற்று பழகிவிட்டோம் ஆதலால் பிறருக்கு கொடுக்க பின்னடிக்கின்றோம். இந்த நிலைமைகள் மாற வேண்டும்! மாற்ற வேண் டும்! இதன் மூலம் அயலவரில் இறைவனை கண்டு எங்கள் மனங்கள் பாலகன் உறங்கும் தீவனத் தொட்டடிகளாக மாற வழியமைப்போம்.

யெ. யெமில் (கட்டைக்காடு)
கலைப்பீடம் பேராதனைப்
பல்கலைக்கழகம்

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# கிறிஸ்மஸ் "கடவுள் நம்மோடு"





### கிறிஸ்மஸ் 1 - குதூகலம்

எனது ஏழு, எட்டு வயது திலிருந்து இந்த மகிழ்வின் நாள் பற்றிய நினைவுப் படலங்கள் என்னுள் புதைந்து கிடக்கின்றன.

எனது வீட்டில் பிள்ளைகள் நாங்கள் ஆறுபேர். நான் ஐந்தாவது. எங்களுடன் அன்ரியின் பிள்ளைகள் இரண்டுபேர். அம்மாவும் அன்ரியும் கிறிஸ்மஸ் உடுப்பெடுக்க பெரிய கடைக்கு நடந்து போவினம். அப்போது எனக்கு வயது ஏழு இருக்கும். எட்டுப் பிள்ளை களுக்கும் புது உடுப்பு, செருப்பு, சப்பாத்து எல்லாம் வரும். புதுசு வருமென்டால் சந்தோசம் தானே! பாத்துக் கொண்டு இருப்பம். மூன்று பெண் பிள்ளைகளுக்கும் சட்டைத்துணி, அம்மாவும் அன்ரியும் நல்ல தையல்காரர். வடிவா பூப்போட்டு அன்ரி சட்டை தைப்பா. ஓடருக்குத் தைப்பினம். எல்லாருக்கும் தைச்ச பிறகு தான் எங்கட சட்டைத்துணிகள் எடுபடும். அன்ரி வெட்டேக்க, தைக்கேக்க எல்லாம் முன்னால நிண்டு பாத்துக்கொண்டே இருப்பன். கடைசியாத்தான் என்ர சட்டை தைப்பினம். மூத்த அக்காக்குத் தான் எப்பவும் முதலிடம். அக்காமார் இரண்டுபேருக்கும் சட்டை தைத்து மிஞ்சின துணிய ஒரு டிசைனாப் பொருத்தி எனக்கு ஒரு சட்டை தைப்பினம். போட்டு பாச்சு 'சோக்கா இருக்கு' எண்டுவினம். எனக்கு அழுகை அழுகையா வரும். அழுதா பேச்சு விழும். சிலவேளை அடியும் விழும். பயத்தில அழுதுகொண்டே போய் படுத்திடுவன். ஆனா கிடைக்கிற பொழுதெல்லாம் தையலைப் பார்த்ததால எனக்குத் தையல் நல்லாப் பழகிற்று. எப்படி உடுப்பு வெட்டுறது, தைக்கிறது எல்லாம் நல்லாப் பழகிற்று.

பிறகு 24ம் திகதி சவுக்குமரம் வரும். எங்கட வீட்டில ஒரு பெட்டகம் இருக்கு. ஒரு வடிவான பெட்டகம். அது வருசத்தில ஒருக்காத் திறபடும். பப்பா, அண்ணாமார் இரண்டுபேரும் திறந்து கிறிஸ்மஸ் சோடினைகள் எல்லாம் பிரிச்சு எடுப்பினம். இப்பயும் நினைவிருக்கு. பச்சை இலைக்கு மேல முந்திரிகைப்பழக் குலை தொங்குற சிவப்பு லைற் சவுக்குமரத்தில கட்டுப்படும். மினுங்கல் சோடினைகள், பாலன்கூடு, இரண்டு கிழமைக்கு முதலே போட்டு முளைச்ச குரக்கன் பாத்திக்கு மேல வைப்பினம். பாக்க நல்ல வடிவா இருக்கும். என்ர அழுகையெல்லாம் பறந்து போய் ஒரே சந்தோசமாக இருக்கும்.

அதோட அடுத்த நாள் கிடைக்கிற கேக்கு, பலகாரங்களின்ர நினைப்பும் வர, நல்ல சந்தோசத்தோட நித்திரையாப் போவன். அம்மா வந்து சாமப்பூசைக்கு எழுப்புவா. நல்ல பனிக்குளிர் எண்டாலும் புதுச்சட்டை, சப்பாத்து, கேக்கு, பலகார நினைப்போட எல்லாருமா குடும்பமா கோயிலுக்கு போவம். சூசைப்பிள்ளைச் சுவாமிதான் எங்கட பங்குத்தந்தை என்று ஞாபகம். அவர் 'கடவுள் நம்மோடு' என்று விளக்கம் சொன்னார். பூசையில நித்திரை நித்திரையா வரும். எண்டாலும் உன்னதங்களிலே எண்டு பாடுற நேரம் எல்லா மணியும் அடிக்க, பட்டாசு வெடிக்க, ஒரே ஆரவாரம். மனசெல்லாம் சரியான சந்தோசமா இருக்கும்.

வடிவான யேசுபாலன் கொட்டிலில பிறந்திருப்பார். எனக்காகப் பிறந்தவர். இடையர் போய் முதல்முதலாக பார்த்தவ. சம்மனசுகள் எல்லாம் நின்று பாட்டுப்பாடும். எவ்வளவு சந்தோசம், சின்னப்பாலன் எங்களோட இருப்பான்! கரோல் வரும். கிறிஸ்மஸ் பப்பா வருவார். அவர கண்டு பயந்து ஓடிப்போய் ஒளிச்சதும் நல்லா நினைவிருக்கு. எவ்வளவு சந்தோசங்கள்! நல்ல கொண்டாட்டங்கள்!

### 'கிறிஸ்மஸ் 2 - பகிர்தல்

இப்போது எனக்கு வயது இருபது. நான் பல்கலைக்கழகத்தில படித்துக் கொண்டிருக்கும் மாணவி. கிறிஸ்மஸ் 'வரப்போகுது உடுப்பெடுக் கேல்லையா?' என்று அம்மா கேட்பார். கட்டாயம் வாங்க வேணும் என்று அம்மாவிடம் காசை வாங்கிக்கொண்டு போய் நாங்களே உடுப்பு வாங்குவம். இப்போது எனது மூத்த அக்கா ஆசிரியர். பப்பா மரித்துப் போனார். அக்காவிற்கு இப்பவும் முதலிடம்தான். அவாவுக்கு கூடக்காசு குடுபடும். நாங்களே போய் உடுப்பு வாங்குவம். முகப்பூச்சு, நகப்பூச்சு, சட்டைக்குப் பொருத்தமான ஸ்டைல் தோடு, காப்பு என்று அலங்காரங்கள், கைலேஞ்சி எல்லாம் புதுசுதான். மகிழ்வுடன் சொப்பிங் செய்து ஆயத்தங்கள் செய்வோம். ஆனால் கடவுள் எங்க இருக்கிறார்! அதெல்லாம் சுத்தப்பொய் என்று தெரியும். வீட்டில கதைச்சால் சண்டை வரும். கொண்டாட ஒரு காரணம் தேவை. மகிழ்வாய் உடுத்து, நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடுவதில் ஒரு மகிழ்ச்சி. இயேசு பிறந்தது உண்மையாய் இருக்கலாம். ஆனால் அவரைக் கடவுளாக்காமல் கொண்டாடும் கிறிஸ்மஸ்.

ஆலயத்தில் குருவானவரின் பிரசங்கம் இப்படி இருந்தது. 'கிறிஸ்மஸ் விழா ஒரு மகிழ்வின் பெருவிழா மட்டுமல்ல, அது ஒரு பகிர்வின் பெருவிழாவும் கூட. கிறிஸ்து பிறப்பு ஒரு வாழ்வின் அனுபவம். அது ஒரு பகிர்வின் அனுபவம். தன் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் வாழ்வுபெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார் (யோவா 3:16). கடவுள் ஒரே மகனைப் பகிர்ந்துகொண்டார்'. செய்தி பிடித்துக்கொண்டது. பகிர்வது எத்தனை மகிழ்ச்சி. நற்செய்தியில் பகிர்வு பற்றிய இடங்களைத் தொட்டுக்காட்டிய பொழுது அவை என் மனதையும் தொட்டன. இருப்பதைப் பகிர்வது, இருப்பதில் பகிர்வது, என்னையே முழுமையாய் பகிர்வது, இயேசுவின் 33 வருடப் பகிர்தல் வாழ்வு சிந்தனையில் நுழைந்தது. நான் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவளாய் இருப்பதையிட்டுப் பெருமிதம் நிறைந்த மனதோடு பகிர்ந்து வாழும் போது கடவுள் எம்மோடுதான் என்ற சிந்தனையைத் தந்த விழா. என்னுள் பகிர்ந்தலுக்கான முயற்சியும் விருப்பமுமாய், கடவுளை என்னோடு அழைத்துக்கொள்ளக் காரணமான கிறிஸ்மஸ் விழா.

### கிறிஸ்மஸ் 3 - மனிதநேயம்

இப்ப எனக்கு வயது நாப்பது. ஆசிரியராகி, பிறகு விரிவுரையாளராகி வேலை செய்யிறேன். என்ர பெயருக்குப் பின்னால் சில பட்டங்களும் சேர்ந்திருக்கு. போர் என்ற கொடூரம் என்ர சகோதரங்களை நாட்டிற்கொன்றாய், ஊருக்கொன்றாய் சிதறடிச்சுப் போட்டுது. எங்கட குடும்பம் கலைந்து போச்சு. கவிட்டுக் கொட்டின நெல்லிக்காய்கள் போல ஆகிப்போனம். இப்போது எனக்குப் புதுக்குடும்பம் வந்திற்று. மூன்று பிள்ளைகளின்ர அம்மா. என்ர சிறுவயது சந்தோசத்த அவர்களுக்கும் கொடுக்க வேணும் எண்டு விரும்புறன். கிறிஸ்மஸ் மகிழ்ச்சி அப்படித்தான். அனுபவத்துக்குள்ள இருந்துதான் பிறக்கும்.

ஆனால் இப்ப நுகர்வுக் கலாசாரம் நுழையத் தொடங்கிற்று. எங்கட சந்தோசங்கள் எது எண்டு அதுவே தீர்மானிக்கிற காலம் தொடங்கிற்று. அழகுகள், அலங்காரங்கள், சோடனைகள் கனக்க தொகையா விரிஞ்சு பரந்து கிடக்கு. எதைத் தெரியிறது, எதை விடுறது எண்ட போராட்டத்துக்குள்ளால நுழைஞ்சு பிள்ளைகளுக்கு நல்லதைக் கொடுக்க வேணும் எண்டு யோசிச்சு, ஆடம்பரமில்லாத, எளிமையான, அழகிய கிறிஸ்மஸ் சந்தோசத் தைக் கொடுக்க முயற்சி செய்யிறன். முந்தி கிறிஸ்மஸ் பிரசன்ற் குடுக்கிறேல்ல. புதுவருசக் கைவியளம் தான் கிடைக்கும். கைவியளக்காசு சேர்க்கிறதும் ஒரு சந்தோசம். பிள்ளைகளுக்கு பரிசு வாங்கி, எல்லரையும் அனுப்பிப் போட்டு கிறிஸ்மஸ் மரங்களுக்கு கீழ அதுகள வச்சு, சன்ரா வந்து உங்களுக்குப் பரிசு தந்தார் எண்டு சொல்லி அவர்களை சந்தோசப்படுத்தி, பிள்ளை களுக்கு நல்ல மகிழ்ச்சியைக் கொடுக்கிறன்.

நான் முந்திச் சொன்னது போல இப்ப என்ர மகன் கடவுள் இல்லை என்றான். கடவுள் இருக்கிறார் எண்டு நிரூபிக்க என்னிடம் ஆதா ரம் ஒண்டுமில்ல. ஆனால் கடவுள் நம்மோடு என்பதை நிரூபிக்க ஆயிரம் அனுபவம் இருக்கு. எனது அனுபவங்கள் வழியாக அவர்களை நடத்தினன். இப்ப நான் விளங்கினதச் சொன் னன். 'எங்கட வீட்டுக்குள்ள அன்பிருந்தால் அது தான் எங்கட கிறிஸ்மஸ். எங்களிட்ட மனித நேயம் இருந்தா அதுதான் கிறிஸ்மஸ்' எண்ட விளக்கம் வந்திருக்கு. இயேசு நமது உள்ளத்துக் குள் பிறக்கும்போது நம்முள் பேரொளி பிறக்கும் (எசா 9:2) வலிமை பிறக்கும், இறை வலிமை பிறக்கும், அருள் பிறக்கும் (எசா 9:6) மீட்பரின் அருள் பிறக்கும் (தீத் 2:11) மாட்சி பிறக்கும், கிறிஸ்துவின் மாட்சி பிறக்கும் (தீத் 2:13)

இதுதானே கடவுள் எம்மோடு. சக மனி தனை நேசிக்கத் தெரிந்தால் அதுதான் கிறிஸ்மஸ். என்னைப்போல் என் அய லானை நேசிப்பது தானே கிறிஸ்மஸ். மனித நேயத்தை வாழ்விற்குக் கொண்டு வருதல்தானே மனம் நிறைந்த கிறிஸ் மஸ். கிறிஸ்மஸ் தரும் பேரொளி எனக் குள், என்ர பிள்ளைகளுக்குள் பெருக வேண் டும். இதுதான் வாழ்வு, இதுதான் என் பேரவா. இயலுமானவரை இப்படித்தான் கிறிஸ்மஸ் கொண்டாட முயல்கிறேன்.

### 'கிறிஸ்மஸ் 4 - அமைதி

இப்ப என்ர வயது அறுபது. எனது முதுமைக்குள் நுழைவதை உணர்கி றேன். பிரமாண்டமான இந்தப் பிரபஞ்சத் தில் நான் ஒரு துகள் எண்டது தெரியிது. எப்பவும் முதலிடம் எடுத்த மூத்த அக்கா முதலிலயே போயிற்றா. அவளோட முந்திப் போட்டி போட்ட மனம் இப்ப துக்கத்தால கனக் குது. சூழப் பார்க்கும் நிகழ்வுகள் ஒரு தெளிவத் தருகுது. என்ர பிள்ளைகளை என்ர அறிவு, அனுபவம் என் தோள்களுக்கு மேல நிப்பாட்டி உலகத்தைக் காட்டினன். அவர்கள் என்னைவிட இன்னும் தூரப் பாக்கினம். இப்போதும் மகிழ்ச்சி. அமைதியான, ஆடம்பரமில்லாத மகிழ்ச்சி. இப்ப நான் பாத்துக் கொண்டிருக்கிறன். என்ர

**பப்சி மரியதாசன்**

பிள்ளைகள் கிறிஸ்மஸ் கொண்டாடுகினம். அவையே சோடிக்கினம். அவையே உடுத்து வினம். அவையிட்ட பகிர்தல் இருக்கு, மனித நேயம் இருக்கு அன்புறவு இருக்கு அதால கிறிஸ் மஸ் மகிழ்ச்சியை இன்னும் கூட மனசுக்குள்ள கொண்டு வருகினம் எண்டு தெரியுது. நிறைவு தானே கண்ணுக்குத் தெரியுது.

மனுவுரு எடுத்த கடவுள் வீட்டுக்குள்ள, மனதுக்குள்ள வந்ததால அன்பின் மகிழ்ச்சிதான் நிறைஞ்சு கிடக்கு. இயேசு இவ்வுலகில் மனித னாகப் பிறந்தார் (லூக் 2:10,11) என்பதை மகிழ்ச்சி யோடு வானதூதர் இடையருக்கு அறிவித்தனர். "உலகில் நன்மனதோர்க்கு அமைதி உண்டாகுக" என்ற வானவர் கீதம் அன்றாடம் காதில கேட்குது. உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க (மத் 5:16) என்ற வசனம் அர்த்தம் பொதிந்ததாய் தெரியுது. கிறிஸ்மஸ் இந்த ஒளியைத் தரும். சாவின் நிழ லில் வாழ்வோருக்குக் கிடைத்த சுடரொளி.அமைதி யின் அரசர் எமக்குத் தரப்பட்டுள்ளார். எமக்குத் தரப்பட்ட அமைதியின் அரசரைக் கொண்டாட எதுதான் எனக்குத் தடையாயிருக்கும்!

**கிறிஸ்மஸ் என்றாலே மகிழ்ச்சிதான். ஏனெனில் கடவுள் நம்மோடு வந்த நாள், கிறிஸ்மஸ்.**

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# யூபிலி ஆண்டு ஆன்மீக மறுமலர்ச்சிக்கான புனித திருப்பயணம்

கடவுள் தமது பேரன்பினாலும், இரக்கத்தினாலும், தெய்வீகச் சாயலாலும் படைத்த இவ்வழகான உலகம் தமது மாண்பை, புனிதத்தை, மனிதத்தை சிறிது சிறிதாக இழந்து வரும் சூழலை நாம் மறுக்கவியலாது. உலக நாடுகளின் அதிகாரப் போட்டி, நாடுகளின் நிலப்பரப்புக்கான போர்கள், மதத் தீவிரவாதச் செயற்பாடுகள், இயற்கை சீற்றப் பேரழிவுகள், வணிக மோசடிகள், குடும்ப அமைப்பின் வீழ்ச்சி எனும் பலதரப்பட்ட சவால்கள், பிரச்சினைகள் நடுவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2025-ஆம் ஆண்டை புனித யூபிலி ஆண்டாக அறிவித்துள்ளார். "நம்பிக்கையின் திருப்பயணிகள்" எனும் மையச் சிந்தனையை யூபிலி ஆண்டின் கருப்பொருளாக முன்மொழிந்துள்ளார்.

இப்புனிதத் திருப்பயணம் 2024 டிசம்பர் மாதம் 24, தொடங்கி 2026 சனவரி மாதம் 6, அன்று நிறைவு பெறும் என்பதைத் தனது "நம்பிக்கை ஏமாற்றாது" என்ற திருமடலில் குறிப்பிடுகின்றார். உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் ஆன்மீக மற்றும் இறை நம்பிக்கை மறுமலர்ச்சியை உருவாக்கி, இயேசுக் கிறிஸ்துவை வாழ்வின் மையமாக்கிச் சாட்சிகளாய் வாழ இந்த யூபிலி ஆண்டு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

நமது "எதிர்நோக்கு" என்பது வெறும் மனித வாழ்வில் வெளிப்படும் சாதாரண உணர்வு அல்ல மாறாக, கடவுள் நமக்கு அளித்த வாக்குறுதியின் (உடன்படிக்கையின்) அடிப்படையில் உருவாகும் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் ஆகும். இதுவே யூபிலி ஆண்டின் கருப்பொருள் செய்தியாகும். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை இன்னும் நெருக்கமாகச் சந்திக்க யூபிலி ஆண்டுத் திருப்பயணிகளான நம்மை உரோமை நகரத்திற்கோ அல்லது தாங்கள் வாழும் பகுதியைச் சார்ந்த யாத்திரைத் ஸ்தலங்களுக்கோ நம் திருத்தந்தை பிரான்சிஸ் அன்புடன் அழைக்கின்றார்.

இதனடிப்படையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களான நாம் மீட்பராம் இயேசுக் கிறிஸ்துவை நெருங்கிச் நம் சந்திக்க யூபிலி ஆண்டு நமக்கு ஒரு மாபெரும் வாய்ப்பினை வழங்குகின்றது. இதனைக் குறிக்கும் விதமாகவே "இயேசுக் கிறிஸ்துவே நமது மீட்பின் வாயில்" என்று கூறி இவ்வாயில் வழியாக நாம் பயணம் செய்து நமது எதிர்நோக்கைப் புதுப்பித்து, உறுதி செய்யவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் யூபிலி ஆண்டின் வழியாக அறைக்கூவல் விடுக்கிறார்.

உலக மக்கள் சந்திக்கும் பல்வேறு சவால்களையும் கவலைகளையும் ஏற்றுக்கொள்ளும் நம் திருத்தந்தை "கடவுளின் அன்பில் நாம் ஆழப்படும் போது எத்தகைய சவால்களையும் நம்மால் எதிர்கொள்ள முடியும்" என்று நம்மை உறுதிப்படுத்துகிறார். யூபிலி ஆண்டு கருணை, அமைதி, மற்றும் சகோதர அன்பு ஆகிய பண்புகள் நிறைந்த இரக்கச் செயல்கள் அடங்கிய புனிதப் பாதையில் பயணிக்க நம்மைத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைக்கிறார்.

2024 டிசம்பர் 24 அன்று, நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பேராலயத்தில் உள்ள புனித வாயிலைத் திறந்து, யூபிலி ஆண்டின் திருப்பயணத்தைத் தொடக்கி வைக்கிறார். புனித வாயில் திறப்பு என்பது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் இரக்கத்தையும், கருணையையும் குறிக்கின்றது. நாம் அனைவரும் இவ்வாயில் வழியே பயணம் செய்து, கிறிஸ்துவின் அன்பை, இரக்கத்தை, உடனிருப்பை அறிந்து, அனுபவித்து அறிக்கையிட அழைக்கின்றோம்.

### 1. எதிர்நோக்கின் வலிமை

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரின் எதிர்நோக்கு என்பது இறைநம்பிக்கையின் பிரிக்கவியலாத, தவிர்க்க முடியாத காரணியாகும். நமது வாழ்வின் சவால்களைத் திறம்பட எதிர்கொள்ள "எதிர்நோக்கு" நமக்குத் துணையாக வருகின்றது. "எதிர்நோக்கு" என்பது வெறும் காத்திருத்தல் மட்டுமன்று மாறாக, நமது வாழ்வில் வரும் தடைகளைத்தாண்டவும், பிறரன்புப்பணியில்நாம் ஈடுபடவும் உதவும் கடவுளின் கொடையாக அமைகின்றது.

### 2. இயேசுவுடன் நமது உறவு

நமக்கும் கடவுளுக்குமான உறவை ஆழப்படுத்தும் நமது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்த, இயேசு கிறிஸ்துவோடு நாம் கொள்ளும் உறவு மிகவும் முக்கியமானதொன்றாக இருக்கின்றது. இவ்வுறவு, செபம், அருளடையாளங்கள், இரக்கச் செயல்கள் ஆகியவற்றின் வழியாகவே உறுதிப்படுத்தப்படுகின்றது. "கிறிஸ்துவே நமது மீட்பின் வாயில்" என்று நாம் கொண்டிருக்கும் பற்றே இறை நம்பிக்கையின் ஆழமாகும். எனவே கடவுளோடு நாம் கொண்டிருக்கும் உறவு என்பது நாம் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் நெருக்கமான உறவை மையப்படுத்தியே உள்ளது.

### 3. ஆன்மீக மறுமலர்ச்சிக்கான பயணம்

யூபிலி திருப்பயணமானது ஆண்டில் நாம் தொடங்கும் ஒருங்கிணைந்த கிறிஸ்தவ வாழ்வின் அடிநாதமாக விளங்குகிறது. இப்பயணம் மாற்றத்திற்கான, மறுமலர்ச்சிக்கான பயணம். கடவுளின் திருவுளத்தை ஏற்று அதன்படி வாழ்வதற்கான பயணம். இப்புனிதப் பயணம் உடல், உள, ஆன்மீக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒருங்கிணைந்த திருப்பயணமாக உள்ளது.

### 4. இரக்கச்செயல்கள்

இரக்கச் செயல்கள், அமைதி மற்றும் சகோ தர ஒற்றுமையில் வாழவும் வளரவும் யூபிலி ஆண்டு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. தேவையில் இருப்போருக்கு மனமுவந்து நாம் செய்யும் அன்புச் செயல்கள் கிறிஸ்துவை நாம் எவ்வகையில் அன்பு செய்கின்றோம் என்பதன் அடையாளமாய் விளங்குகின்றது. ஏழைகளுக்கும், கைவிடப்பட்டோருக்கும் நாம் செய்யும் இரக்கச் செயல்களே கிறிஸ்து நமக்கு வழங்கிய மிக முக்கியமான பணியாகும்.

யூபிலி ஆண்டு என்பது ஒரு மதச் சடங்கு மட்டுமன்று, மாறாக, நமது நம்பிக்கை, எதிர்நோக்கு, கடவுள்மீது நாம் கொண்டுள்ள அன்பை ஆழப்படுத்துவதற்கான அழைப்பு. இத்திருப்பயணத்தில் இப்பணிகள் வழியாக நமது வாழ்விலும், பிறரது வாழ்விலும் ஒளியேற்றவும், அவ்வொளியை அனைவருக்கும் வழங்கவும் அழைக்கப்படுகின்றோம். யூபிலி ஆண்டின் சிந்தனைகளை இப்பொழுது காண்போம். கருணை என்னும் கிறிஸ்துவின் பண்பை நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்த்தெடுக்க முயல்வோம்.

### 5. இளையோரும் புனிதமும்

யூபிலி ஆண்டின் முத்தாய்ப்பாக இளம் அருளாளர் கார்லோ அக்குடிஸ் மற்றும் அருளாளர் பியர் ஜார்ஜியோ பிரசாட்டி ஆகிய இருவருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படவிருக்கின்றது. முதலாமவர் நற்கருணைப் பக்தியை ஊடகத்தின் வழியாக உலகமறியச் செய்த வெறும் பதினேழு வயது நிறைந்த சிறுவன். இவர் கத்தோலிக்க இளைஞர்களுக்கு மாபெரும் முன்மாதிரியாக இருக்கிறார். இரண்டாமவர் கத்தோலிக்க சமூக ஆர்வலர். இவர் சமூக நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கிறிஸ்தவப் பண்புகளை வாழ்வாக்கிய கத்தோலிக்கக் கிறிஸ்தவர். இவ்விருவரின் புனித வாழ்வு, நம்மாலும் இந்த நவீன காலத்தில் தூய்மையாகவும் கடவுளுக்கு நெருக்கமாகவும் வாழ முடியும் என்ற ஊக்கத்தையும் ஆற்றலையும் நமக்குத் தருகின்றது. இவர்களின் புனித வாழ்வும், இறை நம்பிக்கை ஆழமும் வயது வேறுபாடில்லாமல் அனைவராலும் வாழ் முடியும் என்கின்ற உத்வேகத்தையும் அளிக்கின்றது.

### 6. ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வு

யூபிலி ஆண்டின் அடையாளமாக உரோமை நகரின் ரெபிக்கா சிறையில் உள்ள வாயிலைத் திறப்பது என்பதை உணர்வு பூர்வமான முயற்சியாகத் திருத்தந்தை காண்கிறார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் "சிறைக் கதவுத் திறப்பு நிகழ்வு" என்பது இரக்கத்தையும் எதிர் நோக்கையும் குறிப்பதாக உள்ளது. ஆழமாகச் சிந்திப்பின், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வையும், சிறைப்பட்டோருக்கு விடுதலையையும் இரக்கத்தையும், தரும் கிறிஸ்துவின் கருணையையும் குறிப்பிடுகின்றது. நமது நீதிக்கான உண்மையான பயணமும், பிறரின் வளர்ச்சிக்கான நமது ஈடுபாடும் கிறிஸ்தவ விழுமியங்களை நாம் உள்வாங்கியிருக்கும் ஆழத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. எவரையும் புறந்தள்ளிவிடாமல் அணைக்கவும், ஏழைகளை, கைவிடப்பட்டவர்களை அன்போடு ஆதரிக்கவும் வேண்டுமென்று யூபிலி ஆண்டு நமக்கு அறிவுறுத்துகின்றது.

### 7. கிறிஸ்தவ ஒன்றிப்பு

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரின் எதிர்நோக்கு என்பது இறைநம்பிக்கையின் பிரிக்கவியலாத, தவிர்க்கமுடியாத காரணியாகும். நமது வாழ்வின் சவால்களைத் திறம்பட எதிர்கொள்ள 'எதிர்நோக்கு" நமக்குத் துணையாக வருகின்றது. "எதிர்நோக்கு" என்பது வெறும் காத்திருத்தல் மட்டுமன்று மாறாக, நமது வாழ்வில் வரும் தடைகளைத் தாண்டவும், பிறரன்புப் பணியில் நாம் ஈடுபடவும் உதவும் கடவுளின் கொடையாக அமைகின்றது.

### முடிவுரை

யூபிலி ஆண்டான 2025-ஆம் ஆண்டு புனித ஆண்டு. அதனால்,கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எதிர்நோக்குப் பண்பை உணரத் தூண்டும் அழைப்பாகும். கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்தில் நம்முடைய சீரிய பங்கையும், அவர்தம் நற்செய்திப் பணியில் நமது பங்கேற்பையும் ஆழப்படுத்த அழைப்பு விடுக்கின்றது. நம்முடைய புனிதப் பயணத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவாகப் பயணம் செய்து, கிறிஸ்துவின் அளவற்ற அன்பையும் இரக்கத்தையும் இவ்வுலக மக்களுக்கு நமது வாழ்வின் மூலம் பறைசாற்ற யூபிலி ஆண்டு அழைப்பு விடுக்கின்றது. யூபிலி ஆண்டின் திருப்பயணம் மாற்றத்திற்கான, மறுமலர்ச்சிக்கான, ஒற்றுமைக்கான பயணமாகும். கிறிஸ்து உறவில் நாம் வளரவும், கடவுளின் அன்பைச் சுவைக்கவும், இந்தப் புனிதத் திருப்பயணம் நமக்கு வழிகாட்டுகின்றது. இதன் வழியாக, நாம் உலகிற்கு ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக மாறவும், இயேசுவின் உண்மைச் சீடர்களாய் வளரவும் செபிப்போம். உழைப்போம்.

●

## மாற்றத்தின் மனுமகனே மாற்றிடாயோ மானிடரை

அகிலமதை மீட்க கன்னிமரி மைந்தனாகி
ஆயர் குலதத்திற்கே நின் பிறப்பை அறிவித்தவனை
இகமதின் அரசர்க்கெல்லாம் சாட்சியமானவனே
ஈசனவர் வார்த்தையாய் ஏழைகளின் வடிவமானவகன
மானிடரை மாற்றிடும் விடியலாய் வாராயோ

அழகிய உலகம் புலம்பியே அழுகின்றது
அநீதியோ அகோர அலையாய் எழுகின்றது
நீதியின் தடமோ ஆழ்கடலில் மூழ்குகின்றது
பாதி வாழ்வில் பல உயிர்கள் அழிக்கின்றன
ஜோதியாய் எழுந்திடாயோ மாந்தர் இருள் நீங்க

ஊழல்கள் உற்பத்தியாகும் சமூகமதில்
உண்மைகள் உறங்கிடும் தொட்டிலாகின்றதே
உத்தமர் என்ற வெண்ணிற போர்வையிலே
ஊளையிடும் ஓநாய்களும் வலம் வருகின்றனவே
உன்னத மனிதத்தின் மாற்றானாய் வாராயோ

ஏமைகளின் வியர்வையை எருவாகப் புதைத்து
ஏப்பம் விடும் ஏகாதிபத்திய முதலைகள் அழிந்து
போதையின் அராஜகத்தில் சிக்கும் இளையோரும்
பாதை தவறித் தவிக்கும் அவலக் குடும்பங்களும்
மாற்றமுற்று ஏற்றம் காணும் ஏணியாய் வாராயயா

பொருளாதார வறுமை வாழ்வைப் புரட்டுகின்றது
பொறுப்பற்ற அதிகாரிகைளின் கையூட்டலும் மிரட்டுகின்றது
நிமிர்ந்திட முடியா வறுமையில் மக்களினம் தவிக்கின்றது
உயர்ந்திடத் துடிக்கும் ஆட்சியின் மாற்றமதில்
பகிர்ந்திடும் உள்ளங்கைளின் பகலவனாய் வாராயோ

நல்லிணக்கம், நல்லாட்சி, நற்போதனைகள்
சொல்லளவில் மட்டுமே முழங்கிடும் பேராளர்கள்
எல்லோரும் நலம் வாழப் போராடும் பொது நோக்கில்
வல்லகரம் ஒன்றிணையும் மாற்றம் மிகு சமுதாயத்தின்
வலிமைமிகு புயத்தோனாய் வீரமுடன் வாராயோ

மாற்றைதை நோக்கிய பயணத்தில் நம்பிக்கையுடன்
மலர்ந்திடும் புனித யூபிலி ஆண்டில் அவதரித்து
குறையுள்ள, மனங்களையும் கறை படிந்த கரங்களையும்
நிறைவுள்ள புண்ணியங்கைளில் தூயதாக்கி தரணியில்
இறை பண்பு மிளிரும் மனக் குடில்களாக மாற்றிட வாராயோ

ஆக்கம்: S.M. வுளோறன்ஸ்

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## கிறிஸ்மஸின் வரலாறு பற்றி உங்களுக்குத் தெரியுமா?

கிறிஸ்மஸானது கிறிஸ்தவர்களின் மிக முக்கியமான, மகிழ்ச்சிகரமான விழாவாகக் கொண்டாடப்படுகின்றது பல்வேறான பண்பாட்டு வழிமுறைகளைப் பயன்படுத்தி மகிழ்ச்சிகரமானதாகக் கொண்டாடப்பட்டு வருகின்ற இக் கிறிஸ்மஸின் வரலாறானது கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்தின் நோக்கிச் செல்கின்றது இது முதன் முதலில் 4ம் நூற்றாண்டில் உரோமில் கொண்டாடப்பட்டது.

கிறஸ்தவர்கள் மார்கழி மாதம் 25ம் திகதியினைக் கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடி வருகின்றனர். இது உரோமையில் கொண்டாடப்பட்ட "சொலிஸ் டீசியா" (Soli Invictus) என்ற பண்டிகையுடன் தொடர்புபட்டது. அதாவது உரோமையில் இருளினை அகற்றி ஒளியைக் கொடுக்கும் சூரிய தேவனைப் போற்றும் விதமாக மார்கழி 25ம் திகதிகளில் இப் பண்டிகையைக் கொண்டாடினர். அதே நாளைக் கிறிஸ்தவர்கள் பாவ இருளை நீக்கி எமக்கு விடுதலை ஒளியைத் தந்த இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதமாக அக்காலத்தில் நிலவிய பண்டிகைகளின் வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டாடினர்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்மஸ் கொண்டாட்டம் பல்வேறான காலகட்டங்களின் அடிப்படையில் அதன் பண்பாட்டு வழிமுறைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. 19ம் நூற்றாண்டில் கிறிஸ்மஸ் மரம், பரிசுகள் மற்றும் குடும்பச் சந்திப்புக்கள் போன்ற புதிய விமுறைகள் பிரபல்யமாகின.

இன்றைய நாட்களில் கிறிஸ்மஸானது உலகளாிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. இது அன்பு , மகிழ்ச்சி மற்றும் பரிவின் காலமாகக் கருதப்படுகின்றது. இந்நாட்களில் மக்கள் ஒருவருக்கொருவர் பரிசுகளை வழங்கி குடும்பத்துடன் சந்தோசமாக நேரத்தைக் கழித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட இவ்வரலாறானது கிறிஸ்மஸின்முக்கியத்துவத்தையும்அதன்வளர்ச்சியையும்விளக்குகின்றது.

**கி. ஆனந்தராஜ்**

## கண்ணீரில் நனையும் கிறிஸ்மஸ்கள்

எம் அனைவருக்கும் மார்கழி மாதம் தொடங்கினாலே சந்தோசம். பல முன் ஆயத்தங்களுடன் சந்தோசமாக கிறிஸ்மசைக் கொண்டாடுகின்றோம். எமது வீடுளையும், சுற்றியுள்ள இடங்களையும் அலங்கரித்து, புது உடுப்புப் போட்டு, பக்கத்து வீட்டிற்கு மணக்க கூடிய மாதிரி சமைச்சு குடும்பத்துடன் குதூகலமாகக் கிறிஸ்மசை கொண்டாடுகின்றோம்.

ஆனால் எங்களில் பலருடைய புன்னகைகள், சிரிப்புக்களுக்கு பின்னால் பல கண்ணீர்க் கதைகளும், வெளியில் சொல்ல முடியாத மனக் குமுறல்களும், ஏக்கங்களும் ஒட்டி உறவாடுகின்றன. வெளியில் சிரித்து, உள்ளுக்குள் அழுவதற்குப் பலர் பழகிவிட்டதால், கிறிஸ்மஸ் சந்தோசமாக கொண்டாடப்படுகின்றது.

வெளிநாட்டில் வசிக்கும் மகன் மகளிட்ட இருந்து எவ்வளவு காசு வந்தாலும், வீட்டை எப்படி வடிவா சோடிச்சாலும், வடிவா உடுப்பு போட்டாலும் மகனுக்கு காட கிடைச்சு என்னட்ட திரும்பி வந்து என்னை ஒருக்கா கட்டி புடிச்சு கொஞ்சமாட்டானா? என்ர மடியில படுத்து என்னோட செல்லம் பொழிஞ்சுவிளையாடமாட்டானா? எனத் தினம் தினம் உள்ளுக்குள் குமுறும் தாய்மார்கள். ஒன்றாக இணைந்து வாழவேண்டிய கணவன்-மனைவி, குடும்ப வறுமையால் பிரிந்து வெளிநாட்டில் உழைக்கும் கணவனை தொலைபேசிகளில் பார்த்துக் கட்டி அணைத்து முத்தமிட ஏங்கி தினம் அழும் மனைவிமார்கள் சொல்லும் பொழுதே காட்சிகளாகிக் கண்களில் கண்ணீர் ததும்புகின்றது.

ஒரு தசாப்த காலமாகப் பல துன்பங்களுடன், வேதனைகளுடன் தேடியும், போராடியும் கிடைக்காத தன் மகனை, மகளை, கணவனை பார்க்கமாட்டோமா? அல்லது அவர்களுக்கான நீதி கிடைக்காதா என வீதிகளில் கண்ணீர் வடிக்கும் தாய்மார்கள்; இவர்களின் மனவேதனைகள் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை. உயிரோடிருந்தும் அரசியல் கைதிகளாக பல வருடங்களாக சொல்லொண்ணா துன்பங்களை அனுபவிக்கும் தம் அப்பாக்களின் வருகைக்காகத் தினம் ஏங்கி அழுது மன்றாடும் குழந்தைகள்.

விடுதலைப் போராட்டத்தில் தன் மகனை, மகளைப் பலிகொடுத்து யாரும் அற்ற அனாதைகளாக வீடுகளிலும், வீதிகளிலும் கைவிடப்பட்ட நிலையில் என்ர மகன் இருந்திருந்தால் என்னை இப்படி விட்டிருக்கமாட்டான்? இப்படி நான் சாப்பாட்டிற்குக் கையேந்த வேண்டிய நிலை இருந்திருக்காது எனத் தினம் தினம் கண்ணீர் வடிக்கும் தாய் தந்தையர்கள்.

இவற்றை நினைக்கும் பொழுதும், எழுதும்பொழுதும் கண்முன் காட்சிகளாக விரிந்து எம் அனைவரினதும் கண்கள் கலங்கு வதையும்? மனம் ஏன்? என்று குமுறுவதை தயும் தவிர்க்க முடியவில்லை. ஆனாலும் இவை எல்லாம் பலருடைய மனங்களில் நிரந்தர வடுக்களாக மாறிவிட்டன. இவற்றை மாற்றமுடியாது அல்லது மீளமுடியாது எனத் தெரிந்தும் மனங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. வடுக்களுடன் வாழவும் பழகிவிட்டார்கள் அதனால் தான் என்னவோ பலருடைய கண்களுக்குக் கண்ணீர்கள் தெரிவதில்லை.

ஆனாலும் ஒவ்வொரு கிறிஸ்மசும் தமக்கு ஏதோவொரு விடிவைத் தரும், எம் வாழ்வை ஒளிமயமாக்கும் என்ற நம்பிக்கையுடனே கொண்டாடுகின்றார்கள். இப்படியான பலரை நாம் அறிந்திருப்போம், பலர் அயல்களில் இருக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களின் கிறிஸ்மசை மகிழ்ச்சியாக்கியிருக்கிறோமா? ஒரு நிமிடம் சிந்திப்போம். பிள்ளையின் வருகைக்காக ஏங்கும் தாய்க்கு கிறிஸ்மஸ் வாழ்த்து சொல்லி ஒரு அன்பான முத்தத்தை பரிசாக்கினால் போதும். அம்மாவின் பாசத்திற்காக, அரவணைப்பிற்காக ஏங்கும் பிள்ளைக்கு உண்மையான பாசத்துடன் மடியில் தூக்கி வைத்து ஒரு பிடி சோறு ஊட்டி விட்டால் போதும். அப்பாவின்வருகைக்காகஏங்கும்குழந்தைக்கு ஒரு அழகிய பாலன் குடில் செய்து கொடுத்து அதனுடன் குதூகலமாக வெடிகொழுத்தினால் போதும் இப்படிச் சிறு சிறு அன்பான செயல்கள் நிறையவே செய்யலாம் அன்னை தெரேசா சொல்வது போல் "சிறு காரியங்களை நிறைவான அன்புடன் செய்வோம்" எனவே நாமும் அவர்களுக்கு சிறு சிறு காரியங்கள்செய்துஅவர்களுடையகிறிஸ்மசை சந்தோசமான, நம்பிக்கை ஊட்டும் நாளாக மாற்றுவோம் நாமம் கண்ணீர் துடைக்கம் பாலனாக மாறுவோம்.

**அ. அருள்ராஜ்**
**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடம்**

## மாற்றங்களை மலர்விக்காதா கிறிஸ்து பிறப்பு.

இறை மகன் இயேசு மனுவுரு எடுத்து மனிதனாக பிறந்த நாளை, கிறிஸ்து பிறப்பு விழாவாக கொண்டாடுகின்றோம். படைத்தவன் ஒரு படைப்பாக மாறுகின்றான். படைத்தானே படைப்பின் ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுகின்றான். அனைத்தும் அவரால் உண்டாயின உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை (யோவா 3: 1) வாக்கு மனிதரானார்; நம்மிடையே குடிகொண்டார்". (யோவா 1: 14).

இறைவன் இவ்வுலகைப் படைத்தது படைப்பு அனைத்தும் மகிழ்ச்சியாக இருப்பதற்காக அந்தப் படைப்பு இறைவனை வெளிப்படுத்துவதற்காக பாவத்தின் விளைவாக மனிதன் இறைவனை வெளிப்படுத்துவதை மறந்து விடுகின்றான். ஏன்? இறைவனையே மறந்து விடுகின்றான் அவனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர இறைவன் மனுவுரு எடுக்கின்றார். ஆகவே தான், இது படைப்பனைத்திற்கும் ஒரு பெருவிழா. இறைவனே, தவறிய மனிதன் திரும்பி வரவேண்டும் என்று காத்திருக்காமல், அவரே மனிதனை மீட்டு மீண்டும் இறை உறவில் இணைக்கின்றார். கிறிஸ்து பிறப்புப் பெருவிழா என்பது உறவு மீட்டெடுப்பது; உறவில் மகிழ்ச்சி கொள்வது; உறவை வெளிப்படுத்துவது.

அமைதி என்பது பாலன் இயேசுவின் பிறப்புக் கொணர்த்த நற்செய்திகளில் ஒன்று: நல்ல மனதுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி என்பது அதன் மறுபக்கச் செய்தி, அகமகிழ்வும் அமைதியும் அவனிக்கு அதிகமாகத் தேவையானவை. அண்மைக்காலத்தில் எங்கு பார்த்தாலும் போரும் வன்முறையும் மிகுவாக மலிந்திருக்கின்றன.

ஒரு நாட்டையே அழித்து ஒழித்து தரைமட்டமாக்கும் கொடிய நிழ்வுகள், பீரங்கிக்குண்டுகளால் நகரங்கள், வைத்திய சாலைகள், இல்லங்கள், இருப்பிடங்கள் அழித்து நொறுக்கப்படும் தருணங்கள், பெருவாரியான பாமர மக்களைக் கொலை செய்து பழிவாங்கும் சதித்திட்டங்கள் என்பன பாலன் பிறந்த புண்ணிய பூமியில் இன்றும் அவர் கொணர்ந்த அன்பு, அமைதிக்கு எதிரான செயல்கள் நடைபெறுவது மிகுந்த வேதனை தருகிறது.

பாலன் இயேசுவை வரவேற்க பாருலகம் தயாராகும் தருணமிது. இந்த நல்ல பொழுதில் நம்மிடையே பிறக்கும் இயேசு பாலன் அன்பை, அமைதியை உலகிற்கு கொண்டுவர மாட்டாரா? உறவு, ஒற்றுமை நிலவும் சூழல் நம்மிடையே ஏற்படாதா? தீவிரவாதம், தாக்குதல், பாமரர் கொலை எல்லாம் முற்றிலும் மாறாதா? மத வெறியர்களின் வெறித்தாக்குதல்கள், மதத்தின் பெயராலே பிறரை அழிக்கும் அவல நிலை அகலாதா? மாற்றங்கள் மலராதா? போன்ற ஏக்கங்களும் தாகங்களும் கூட நம் உள்ளத்தின் ஆழத்தில் ஓங்கி ஒலிக்கின்றன. எனவே பிறக்க விருக்கும் பாலனிடத்தில் எம்மை சரணா கதியாக்குவோம். மலரவிருக்கும் புது ஆண்டிலே எமது செபங் களால் இவ்வுலகையும் எமது ஏக்கங்களையும் மனநிறைவோடு புத்துயிர்ப் படையச் செய்வோம். "நேரிய மனத்தோர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் செழிப்பர்". (தி. பா 1: 3)

**நே. அன்ரனி றோபேட்**
**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடம்.**

## வெளிச்சம்

உறவுகளும், தொடர்புகளும்
பரிமாற்றங்களும் பெற்று வேட்டுகளாகிப் போய்
பொய்மையில் குளிக்கும் நடத்தைக் கோலங்கள்
பாசம் என்னும் தடாகத்தில் நீந்திக் கரைசேரக்
காத்திருக்கும் ஓடங்கள் அரவணைப்பு
என்னும் துடுப்போடு துணிந்து
பயணிக்கின்றன ஏனெனில் அதுவே
இயேசு பாலனின் பிறப்பு

நம்பிக்கைக் கனவைச் சுமந்த விழிகள் இன்று
ஈரமாகி வற்றிப்போய்விட்ட நிலை நம்பிக்கையிலே
குழப்பமாகி முகமிழந்து முகவரி தொலைத்து
நம்பிக்கையே நடைப்பிணமாகி விட்டநிலை
ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று கருகிப்போன
துளிர்கள் பசுமையாக மாறிப் பலன் கொடுக்க
பாலன் இயேசு பிறந்துள்ளார்.

மண்ணில் எங்கும் மடிவுகள்
சோகங்கள் சொந்தமாகி விட்டன
தொடர்கின்றது அவலமான வாழ்க்கை
விடிவு வராதா என்று ஏங்கி ஏங்கியே
எலும்புக் கூடுகளாகி விட்ட வாழ்க்கை
இருண்ட மேகத்திலும் ஒளிக்கீற்றாக
நம்பிக்கையின் வெளிச்சமாக
பிறந்துள்ளார் பாலன் இயேசு

**விமலதாஸ் டொறக்சன்**
**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடம்**

## இன்று கிறிஸ்மஸ்

ஆதவன் உதித்தான் அகிலத்தைக் காக்க
அன்பின் ஆதவன் இவன்
அன்பினால் உலகத்தினை ஆள
அமைதியின் வெண்புறாவாய்
விண்ணக மண்ணக அரசனாய்
அவனியில் மலர்ந்தான் மாபரன்

மாடடைக் குடிலில் மரியின் மகனாய்
மலர்ந்தான் பாலகன் இயேசு
மானிடத்தின் விடிவெள்ளியாய்
மாந்தர்களின் பாவம் போக்கும் செம்மறியாய்
உலகின் உன்னத ஒளியாய்
மாந்தர்கள் மனதில் மலர்ந்தான் மாபரன்

வருடம் ஒரு கிறிஸ்மஸ் - வழமைபோல்
வரட்டும் போகட்டும் - ஆம்
இது வெளி இதயங்களை அலங்கரிக்கும்
ஒரு முகமூடி போட்ட கிறிஸ்மஸ்
தற்போது முகவரி இல்லாத கிறிஸ்மஸ்
எம் சமூகங்களிலே

எங்கே எங்கள் பகிர்வு - இல்லை
இங்கு பகிர்வுக்கு பதில் வழிவாங்கும் நிலை
எங்கே எங்கள் மனிதம் - இல்லை
இங்கு மனிதம் காற்றோடு காற்றாய்
எங்கே இன்றைய மனிதன் - தேடுகின்றேன்
தெரியவில்லை எங்கு சென்றான் அவன்

கிறிஸ்மஸ் ஒரு அமைதியின் விழா
மகிழ்வின் விழா - இது
மனுக்குலத்தின் மாபெரும் விழா
மனுமகனின் விழா - இது
மாற்றத்துக்கான விழா... மாறுவோமாக...

**அ. அபின்றோ**
**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடம்**

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# சுயநிர்ணய உரிமையும் சர்வதேசச் சமவாயமும்

இனப்பிரச்சினைக்கான தீர்வு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்து ஏதோவொரு வழியில் ஏமாற்றப்பட்டே வருகின்றது என்பது பகிரங்கமாகத் தெரிந்த ஒன்று. சிங்கள - தமிழ் முரண்பாடு இன்று வரை தொடர்கின்றது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு.

1983 இல் இருந்து இந்திய அரசு ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் தலையீடு செய்திருக்கிறது. பின்னர், அது சர்வதேச விவகாரமாக மாறி 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஜெனிவா மனித உரிமைச் சபையில் விவாதிக்கப்பட்டும் வருகின்றது.

ஆனால், ஈழத்தமிழர்கள் கோருகின்ற சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சுக்கள் ஒரு போதும் ஜெனீவாவில் விவாதிக்கப்படவில்லை. அத்துடன் இன அழிப்புப் பற்றிய உரையாடல்கள் கூட இல்லை. மாறாகப் போர்க் குற்ற விசாரணை அல்லது போர்க் குற்றம் புரிந்த படையினருக்குப் பயணத் தடைவிதிப்பது போன்ற பேச்சுக்கள் மாத்திரமே விஞ்சியுள்ளன.

ஆனால், 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வாக ஜெனிவா மாத்திரமல்ல அமெரிக்க அரசு கூடப் பேசியிருக்கிறது. 2012 இல் அமெரிக்கா ஜெனிவாவில் சமர்ப்பித்த இலங்கை தொடர்பான பிரேணையில்கூட 13 முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

2002 இல் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுக்கள் ஆரம்பித்தபோது போரின் பக்கவிளைவுகளுக்குரிய தீர்வுகள் பற்றிய உரையாடல்கள் மாத்திரமே முதலில் இடம்பெற்றன. சுயநிர்ணய உரிமை - சமஸ்டி என்றெல்லாம் பின்னர் பேச்சுக்கள் எழுந்தன. இச் சந்தர்ப்பத்தில் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் பற்றிய விடயம் முக்கியமாக இருந்தது.

ஆனால், கொழும்பில் எழுந்த அரசியல் நெருக்கடிகளினால் பின்னர் அது வேறொரு திசைக்குச் சென்றுவிட்டது. இப் பின்னணியில்தான் மகிந்த ராஜபக்ச 2005 இல் ஜனாதிபதியானார். சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் ICCPR எனப்படும் சர்வதேசச் சமவாயத்தை **(International Covenant on Civil and Political Rights- ICCPR)** மகிந்த 2007 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துச் சட்டமாக்கினார். ஆனால், சர்வதேசச் சமவாயத்தில் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்ற உறுப்புரையை நீக்கம் செய்து சமவாயச் சட்டம் என்ற பெயரில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் 56 ஆம் இலக்கச் சட்டமாக மகிந்த அரசாங்கம் இணைத்திருந்தது. அதுவும் அரசியல் யாப்பில் இணைக்காமல் சாதாரண சட்டமாகவே மகிந்த அதனை இணைத்தார்.

அத்துடன், **ICCPR** எனப்படும் இந்தச் சமவாயத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் சுயநிர்ணய உரிமை (Self-Determination) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு, இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.



பல தேசிய இனங்கள் வாழும் நாடொன்றில், மக்களிடையே இனக் குரோதங்கள், மதங்களிடையே வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் ஆகிய குற்றச் செயல்கள் எழக்கூடாதென்ற நோக்கிலேயே ICCPR எனப்படும் சமவாயத்தின் பிரிவு 3(1) சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப் புரிதல் இன்றியே இலங்கை தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து இச் சமவாயத்தைச் சட்டமாக்கியுள்ளது.

இச் சமவாயச் சட்டத்தைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முற்றாகவே நிராகரிக்கும் செயற்பாட்டில் அப்போதிருந்தே மகிந்த அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி என்று மார்தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் செய்த புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபில் கூட சுயநிர்ணய உரிமை பற்றிய உள்ளடக்கங்கள் இல்லை. 2020 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச குடும்பம் குறிப்பாக கோட் டாபய, இனப் பிரச்சினை என ஒன்று இல்லை என்ற தொனியில் தனது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தியிருந்தார்.

இப் பின்னணியில் மாற்றம் என்றும் சோஷலிசம் - சமத்துவம் என்றும் கூவிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அநுரகுமார திஸாநாயக்கவும், ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வெறுமனே நிர்வாக அதிகாரமாகக் கருதுகிறார். ஆகவே, சிங்களத் தலைவர்கள் சுயநிர்ணய உரிமையை வழங்கக்கூடாது என்ற விடயத்தில் தெளிவாக இருக்கின்றனர் என்பது கண்கூடு.

அதேநேரம், சர்வதேசச் சமவாயத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ள உறுப்புரை 1 இலும் கோளாறுகள் உள்ளன. குறிப்பாகச் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்படுகின்ற உறுப்புரை 1 இல் ஒரு நாட்டில் வாழும் 'அனைத்து மக்கள் (All peoples) என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், ஒரு நாட்டில் வாழும் அனைத்துத் தேசிய இனங்களுக்குரிய சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ, தேசிய இனம் ஒன்றைத் தேசமாக ஏற்க வேண்டுமென்றோ குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. இதைத்தான் இலங்கையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறது. ICCPR உறுப்புரிரை 1 இல் கூறப்பட்டுள்ளது போன்று இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற கோணத்தில் இலங்கை கருதியிருக்கிறது போலும்.

ஆகவே, ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட நாடொன்றில் வாழும் தேசிய இனங்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கக் கூடிய முறையில் சுயநிர்ணய உரிமை குறித்து ICCPR எனப்படும் சமவாயத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்பதையும் அதன் கோளாறுகள் பற்றியும் சர்வதேச அரங்கில் ஒரு மித்த குரலாகப் பேச வேண்டியது தமிழர் தரப்பின் பொறுப்பல்லவா? இன்று வரை அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டினார்களா? புத்தாண்டில் சரி தமிழ்க்கட்சிகளுக் கிடையில் கருத்தொற்றுமை தோற்றுமா?

**அ.நிக்ஸன்**

**ICCPR உறுப்புரை 1 இல் கூறப்பட்டுள்ளது போன்று இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற கோணத்தில் இலங்கை கருதியிருக்கிறது போலும்.**



## உள்ளத்தில் உறைய வரும் உன்னதன்

அன்று,  
பெத்லகேம் ஊர்தனில்  
மாடடைக் குடிலினுள்  
மானிடத்தின் அவதாரமாய்  
வந்துதித்தாரே நம் பால குமாரன்...  
இன்று,  
டிஜிட்டல் உலகம் சுற்றி  
தனிமையில் மனிதன் பயணிக்கையில்  
Facebook, WhatsAp, Viber என  
சமூக வலைத்தளங்களிலே தான்  
பாலனின் பிறப்பு.  
நாளை,  
குடும்பத்தில் சண்டைகளும்  
நாட்டினுள் குழப்பங்களும்  
நாடுகளுக்கிடையில் போர்களும் என  
சமூகமே சாத்தானின் பிடியினுள் அகப்பட  
எங்கே பிறக்கவுள்ளார் நம் மீட்பர்????  
காலங்கள் மாறினாலும்  
நம்பிக்கையின் பயணிகளாக மாறி  
நம் உள்ளங்களில் இடமளிப்போம்  
பிறக்கவுள்ள பாலகுமாரனை...

**அருட்சகோ. பி. றொலக்சன்**  
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**

## தாவீதிலிருந்து முளைத்தது ஒரு தளிர்

வாக்களித்த தேசமொன்றுக்காய் - தினமும்  
ஏக்கமுடன் எதிர்பார்த்த இனமொன்றுக்காய்...!  
தேடிய கண்களும் அலைந்த கால்களுமாய்  
விடியலை நாடி நாதியற்ற இனமொன்றுக்காய்...!  
வாழ்ந்து நிமிர அடையாளமொன்றுக்காய்  
வீழ்ந்து மடிந்து விழுப்புண்ணடைந்த இனமொன்றுக்காய்  
படைகொண்டு போராடிக் களமாடித் தளர்ந்து  
விடையின்றி வீணரான இனமொன்றுக்காய்

மேய்ப்பனற்ற ஆடுகளாய் திசைசிதறி  
ஏய்ப்பவனுற்ற ஏமாளியாய் சிக்கிய இனமொன்றுக்காய்  
நொந்துபோய் அந்தரித்த மக்களாகி  
வெந்த புண்ணில் வேல் பாய்ந்த இனமொன்றுக்காய்...  
வலிதாங்கி மீள எழ நினைத்தும்  
பலியாகிப் படுகுழியில் பழிதீர்ந்த இனமொன்றுக்காய்...!  
தலைவனில்லாப் படையாகத் தத்தளித்து  
வலைமாண்ட மீனாகி உயிர்விட்ட இனமொன்றுக்காய்...!

கொள்ளைநோய் கொன்ற மீதியாய் மிஞ்சி  
வெள்ளைக் கொடிகாட்டி சல்லடையான இனமொன்றுக்காய்  
காலாறச் சுற்றிவந்த மண்ணிலே - வாழ்ந்த  
வரலாறே காற்றாகிப்போன இனமொன்றுக்காய்  
வெஞ்சினமாய் வெருண்டு பொங்கி - அமிழ்ந்து  
துஞ்சித் துவண்டு தூர்ந்த இனமொன்றுக்காய்  
காயங்கள் காயாமல் ஓலங்கள் ஓயுமுன்னே  
மாயவித்தை மந்திரத்தில் முடங்கிய இனமொன்றுக்காய்...

பருகிய மதுவுடன் மாது சூது எனப் -பொல்லாப்  
பெருகிய பாவத்தில் மூழ்கும் இனமொன்றுக்காய்...!  
விதையுண்ட மறவரின் மரணம் மறந்து  
புதைகுழியின் பாதையில் பயணிக்கும் இனமொன்றுக்காய்...!  
விலை பல கொடுத்து கலைத்தொழில் காத்தும்  
நிலைமாறி உருக்குலையும் இனமொன்றிற்காய்...!  
தங்கம் சேர்த்துழைக்க வங்கமே நாடியும்  
அங்கமறுத்து செங்குருதி கடலோடும் இனமொன்றுக்காய்...!  
*தாவீதிலிருந்து முளைத்தது ஒரு தளிர்...*

**இ. மத்தியூஸ் டியோனி**  
**சென். ஜேம்ஸ் இளவாலை**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

(விஜி, யாழ்ப்பாணம்)

**கே: 'கிறிஸ்மஸ்' என்றால் என்ன?**

**ப:** விஜி, கடவுள் மனிதன் ஆனார் நம்மிடையே குடிகொண்டார் என்பது தான் 'கிறிஸ்மஸ்'. அதாவது, கடவுள் மனிதனைத் தேடிவந்த சம்பவம். விண்ணகம் மண்ணகம் வந்த நிகழ்வு.

*(சுமதி, யாழ்ப்பாணம்)*

**கே: வாழ்வோடு தொடர்புபடாத வழிபாடு பற்றி என்ன நினைக் கின்றீர்கள்?**

**ப:** சுமதி, நினைப்பதற்கு இதில் என்ன இருக்கின்றது, சொல்லுங்கள்! உப்பற்ற உணவு போன்றது! 'வாழ்வி லிருந்து புறப்படாத வழிபாடும் வாழ்விற்கு இட்டுச்செல்லாத வழிபாடும் அருத்தமற்றது மட்டுமல்ல அவசியமற்றது.' காரணம், அது நெல்மணியைக் கொண்டிராத பதரைப் போன்றது. அப்படிப்பட்ட ஒரு தனிப்பட்ட அல்லது கூட்டு வழி-பாடு உண்மையில் தேவையில்லை! வாழ்வு வழிபாட்டைப் பாதிப்பதில்லை, வழிபாடு வாழ்வை மாற்றுவதில்லை என்றால் ஒருவர் தன் வாழ்வையும் வழிபாட்டையும் புனருத்தாரணம் செய்வது இன்றியமையாதது.

*(சுகந்தன், மன்னார்)*

**கே: வயதானவர்கள், ஏன் பெற்றோர் கூடத் தம் பிள்ளைகளால் கவனிக்கப்படாத சூழ்நிலைகளைப் பார்க்கின்றோம். இந்நிலை மாற என்ன செய்யலாம்?**

**ப:** சுகந்தன், பல்லி ஒன்றிடமிருந்து பாடம் கற்கலாம்! இது ஜப்பானில் நடந்த உண்மை கதை. ஜப்பான் நாட்டை சேர்ந்த ஒருவர் தன்னுடைய வீட்டை புதிப்பிப்பதற்காக மரத்தாலான சுவரைப் பெயர்த்து எடுத்து கொண்டிருந்தார். ஜப்பான் நாட்டில் பெரும்பாலும் வீடுகள் மரத்தாலயே கட்டப்பட்டிருக்கும். இரண்டு கட்டைகளுக்கு இடையில் இடைவெளி விட்டு கட்டப்பட்டிருக்கும். வீட்டுச் சுவரைப் பெயர்த்து எடுக்கும்போது இரண்டு கட்டைகளுக்கு இடையில் ஒரு பல்லி சிக்கி இருப்பதை அவதானித்தார். அது எப்படி சிக்கி இருக்கிறது என்று அந்தப் பல்லியை சுற்றிப் பார்த்தார். அவரின் அவதானிப்பின்போது வெளி பகுதியில் இருந்து ஆணி அடிக்கும் போது அந்த ஆணி பல்லியின் காலில் இறங்கி இருக்கிறது. அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆணி அடித்து குறைந்தது மூன்று ஆண்டுகளாகி இருக்கும். எப்படி இந்தப் பல்லி மூன்று ஆண்டுகள் உயிருடன் இருந்தது, இதை நாம் கண்டுபிடித்து ஆக வேண்டும் என்று மேற்கொண்டு வேலை செய்யாமல் அந்த பல்லியை கண்காணித்து வந்தார். சி-றிது நேரம் கழித்து இன்னொரு பல்லி அதன் அருகில் வருவதை கண்டார். அந்த பல்லி தன் வாயில் இருந்து உணவை எடுத்து சுவரில் சிக்கிக் கொண்டு இருந்த பல்லிக்கு ஊட்டுவதை பார்த்தார். அவருக்கு அதிர்ச்சி! மூன்று ஆண்டுகளாக இந்தப் பல்லி சுவரில் சிக்கி இருந்த தன் சக பல்லிக்கு உணவு அளித்து வந்து உள்ளது என்ற உண்மையைக் கண்டுகொண்டார். ஒரு பல்லி தன் சக பல்லிக்கு எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் மூன்று ஆண்டுகள் உணவளித்து வந்துள்ளது. ஒரு பல்லியால் முடியும்போது உங்களால் முடியாதா என்ற பாடத்தைக் கற்றுணர்வோம்.

*(அமலன், யாழ்ப்பாணம்)*

**கே: அண்மையில் '84, '85 மன்னார்ப் படுகொலைகள் சொல்வதென்ன? என்ற ஆவண நூலொன்றினை வெளியிட்டிருந்தீர்கள். நம் மண்ணில் நடந்த பல விடயங்களை நாம் அறியாமல் இருக்கின்றோம் என்பதனை அறியவருகின்றபோது வெட்கமாகவும், அதேவேளை இத்தனை அறியாமையில் இருந்திருக் கின்றோமா என்ற உணர்வும்தான் ஏற்பட்டது. ஆவணமாக்கலின் அவசியத்தைக் கூறுவீர்களா?**

**ப:** அமலன், கடந்ததை இலகுவாகவே மறந்துவிடும் மக்களினமாக நாம் மாறி வருகின்றோம்! இது மிகவும் ஆபத்தான ஒன்று. காரணம், வரலாற்றை மறந்து விட்டால் ஒரு மக்களினத்தின் இருப்பும் வாழ்வும் கேள்விக் குறியாகிவிடும். எமது காலத்தில், எமது மண்ணில் நடந்த சம்பவங்களையே நாளடைவில் மறந்துவிடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. எனவேதான், ஆவணப்படுத்தல் மிகமிக அவசியமானது. இவ் ஆவணப்படுத்தல் பல வடிவங்களில் இடம்பெறலாம். எவ்வடிவத்தில் செய் கின்றோம் என்பதும் முக்கியமானது. ஆனால், அதனைவிட எவ்வடிவத்திலேயாவது செய்வது இன்றியமையாதது. உதாரணமாக, நமது காலத்தில் நடந்தவற்றையே மறந்து விடுவோம் என்றால் நமக்குப்பின் வருபவர்கள் அவற்றின் 'நினைவை'க் கொண்டிருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை! அப்படி நினைத்தாலும் சம்பவங்களின் தொடர்பும் அதன் தாக்கமும் மாறுபட்டதாக, குறைவுபட்டதாக ஏன் சிலவேளை-களில் திருவுபடுத்தப்பட்டதாக மாறிவிடலாம். ஆகவேதான், ஆவணமாக்கல் ஊடாக திரிவுபடுத்தப்படாத உண்மை வரலாறுகள் பேணப்படுவதோடு அவை நினைவு கூரப்படும். அதன் மூலம் அவற் றுக்கான பரிகாரத்தையும் அடைய வழிகளைத் தேடமுடியும்.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: 2024ஆம் ஆண்டில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட நேர்மறையான மாற்றம் 2025ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் ஏற்படும் என நம்புகின்றீர்களா?**

**ப:** ஆனந்தன், நேர்மறையான மாற்றத் திற்கான சமிக்கைகள் தெரிகின்றன. அவை எங்கள் அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒன்றாகவே தெரிகின்றது. நிரந்தர அரசியல் தீர்வைநோக்கிப் புதிய ஆட்சி நகருமா? புதிய ஆட்சியாளர்கள் நகர்வார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற கொள்கைத் திரட்டை தேசிய மக்கள் சக்தி முன்வைத்திருக் கின்றது. வளமான நாடு அழகான வாழ்க்கையை அமைத்துத்தர தொடர்ந்து உழைப்பார்களா என்பதற்குக் காலம்தான் பதில்சொல்லும்.

## வந்திடுங்கள்

நத்தார் தாத்தா வந்திடுங்கள்
இனிதாய் ஒருமுறை
வந்திடுங்கள்
எம் எல்லோர் உள்ளங்களிலும்
இனிதாய் ஒருமுறை
வந்திடுங்கள்

ஆதரவற்ற சிறுவர்கள்
உள நோயாளர்கள்
கோயில்களிலும்
தெருக்களிலும்
வாழ வழி இன்றி
அல்லல் படுகின்றார்கள்
அவர்கள் வாழ்வில்
அமைதியை அளித்திட
இனிதாய் ஒருமுறை
வந்திடுங்கள்

பாழாய்ப் போன போதையால்
பாலியல் வன்மம்
தினம் தினம் நடக்கின்றது
உயிர்களைத் தாங்களே
மாய்த்துக் கொள்கிறார்கள்
தளர்ந்து போன
மனங்களைத் தேற்றிட
இனிதாய் ஒருமுறை
வந்திடுங்கள்

**குருநாதன் குஜிலின்**
**நாவாந்துறை**


## விண்ணக வாழ்வின் 13ம் ஆண்டு நினைவலைகள்



**தாய் மடியில்** 12 . 07 . 1942



**பேரின்ப வான் வீட்டில்** 22 . 12 . 2011

"உமது திருவுளப்படியே என்னை நடத்துகின்றீர்
முடிவில் மாட்சிமையோடு என்னை எடுத்துக் கொள்வீர்"
(திருப்பாடல் 73:24)

**என்றென்றும் நினைவுகளுடன்**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

**அமரர்**
**வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன்** (JP)
**(பேரின்பம் – வல்வெட்டித்துறை)**
யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி M.O.H (2001-2011 )

AD-62

ஆவே மரியா
72 கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்



### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாகவிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே எமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவை-கள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்னெறன்றும் உமது முடிவில்லாத மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவைகள் எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து 3 நாட்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவைகளைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவைகள் நிறை வேறும். இச் செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி. – **ஓர் அடியாள்**

AD - 61


## *விடியலை நோக்கி*

*கடவுளின் அன்பு கருத்தரித்தது*
*கன்னிமரியின் கனிவான உதரத்தில்*
*அவர் நம்மை அன்பு செய்தார்*
*அயலவனை அன்பு செய்ய*
*அனைவரும் விழித்தெழுவோம்*
*அவர் வழி நடந்திடுவோம்*


*இறையே ஒளியே - எம் வாழ்வின் வழியே*
*அன்பே அமுதே - எமை அழைத்த கரமே*
*நிலவே ஒளியே நிம்மதியின் வடிவே*
*உறவே உயிரே - எம் உலகின் ஒளியே*
*உந்தன் ஒளியால் எந்தன் வாழ்வில்*
*உன்னை வாழ என்னில் ஒளிர்வாய்*

*நீதியும் நிம்மதியும் நின் துணையாய் கிடைக்க*
*நிலையில்லா எம் வாழ்வின் நிலையான*
*ஒளியே வா*
*மாடடைக் குடிலில் மாமரி மடியில்*
*மன்னனாய் பிறந்த மாபெரும் ஒளியே*
*மனிதனின் மீட்பை மனதிலே கொண்டு*
*விரைந்தாயோ இன்று மனுக்குலம் நோக்கி*
*விடுகதையாய் தொடரும்*
*விடுதலைக் கனவுகளில்*
*விரும்புகிறேன் நடக்க - உன்*
*ஒளியின் நிழலின் விடியலை நோக்கி*

*புயல் மழை வெள்ளம் ஒரு புறம்*
*புதுப்புது மது, குடி, புகை இன்னொருபுறம்*
*புதிய வரிமுறைகளும்*
*புத்தம் புது விலைவாசிகளும்*
*புதிய அரசியலமைப்புகளும்*
*புரியாத அரிசி, மருந்து தட்டுப்பாடும்*
*புனித பூமிச் சண்டையும்*
*புதிய அணுப் பரிசோதனையும்*
*புரியாத புதிராய் கேட்கும்*
*புறுபுறுக்கும் மனிதரின்*
*புலம்பல் சத்தங்களும்*
*புரியும் ஒரு நாள்*
*புனிதா உன் அருளால்*

*விடிவெள்ளியே - எம் வாழ்வின்*
*விருட்சமாய் நீ தோன்ற*
*விருப்பமாய் காத்திருக்கிறேன்*
*விடியலே உனை நோக்கி*

***தா. போல் றொசான்***
***2ம் வருட மெய்யியல்***



அன்று விண்மீனைக் கண்டு
விரைந்த ஞானிகள் போல
இன்று மாடடைக் குடில்களில்
மீட்பரைக் கண்டு விடியட்டும்
எம் தேசம் என்று

ஓவியம்
யோ. ப. யோய்

# குருத்துவ வாழ்வில் 61 ஆண்டுகள்



இறைவனின் திராட்சைத் தோட்டத்தில்
இற்றைவரை நற்கனி கொடுத்து வரும்
ஆயர் ஆண்டகையே குருத்துவ வாழ்வின்
அறுபத்தொராம் ஆண்டினில்
அடியெடுத்து வைத்து
பணிக்குருத்துவத்திற்கு அணிசெய்யும்
நல்லாயன் உந்தன் பணி வாழ்வு
நம் திருஅவைக்கு அடித்தளம்
நம் மறைவாழ்விற்கு முன்னுதாரணம்
இந்நாளில் இறையருள் வேண்டி
இதமான தங்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்

## விடியலை நோக்கி

கடவுளின் அன்பு கருத்தரித்தது
கன்னிமரியின் கனிவான உதரத்தில்
அவர் நம்மை அன்பு செய்தார்
அயலவனை அன்பு செய்ய
அனைவரும் விளித்தெழுவோம்
அவர் வழி நடந்திடுவோம்

இறையே ஒளியே - எம் வாழ்வின் வழியே
அன்பே அமுதே - எமை அழைத்த கரமே
நிலவே ஒளியே நிம்மதியின் வடிவே
உறவே உயிரே - எம் உலகின் ஒளியே
உந்தன் ஒளியால் எந்தன் வாழ்வில்
உன்னை வாழ என்னில் ஒளிர்வாய்

நீதியும் நிம்மதியும் நின் துணையாய் கிடைக்க
நிலையில்லா எம் வாழ்வின் நிலையான
ஒளியே வா
மாடடைக் குடிலில் மாமரி மடியில்
மன்னனாயப் பிறந்த மாபெரும் ஒளியே
மனிதனின் மீட்பை மனதிலே கொண்டு
விரைந்தாயோ இன்று மனுக்குலம் நோக்கி
விடுகதையாய்த் தொடரும்
விடுதலைக் கனவுகளில்
விரும்புகிறேன் நடக்க - உன்
ஒளியின் நிழலின் விடியலை நோக்கி

புயல் மழை வெள்ளம் ஒரு புறம்
புதுப்புது மது, குடி, புகை இன்னொரு புறம்
புதிய வரிமுறைகளும்
புத்தம் புது விலைவாசிகளும்
புதிய அரசியலமைப்புக்களும்
புரியாத அரிசி, மருந்துத் தட்டுப்பாடும்
புனித பூமிச் சண்டையும்
புதிய அணுப் பரிசோதனையும்
புரியாத புதிராய்க் கேட்கும்
புறுபுறுக்கும் மனிதரின்
புலம்பல் சத்தங்களும்
புரியும் ஒரு நாள்
புனிதா உன் அருளால்

விடிவெள்ளியே - எம் வாழ்வின்
விருட்சமாய் நீ தோன்ற
விருப்பமாய்க் காத்திருக்கிறேன்
விடியலே உனை நோக்கி

தா. போல் றொசான்
2ம் வருட மெய்யியல்

## புதிதாய்ப் பிறப்போம்

புவிதனில் உள்ள தம் மைந்தர்கள்
பாவ வாழ்வு தனை யாக்கும் நிலை கண்டு
பாவியரை மீட்கவெனப் பெத்லகேமில்
அவதரித்தார் எம் மீட்பர் பாலன் இயேசு!

ஈராயிர வெள்ளியாண்டு கடந்தும்
ஈடில்லாத் துன்ப துயரங்களோடு – நாம்
ஈர விழிகளுடன் பயணிக்கும் எம்
ஈகைச்சுடர் காலத்தை மாற்றும் இயேசுவே!

திசை தெரியாது பயணிக்கும் வாழ்வை
திசை காட்டியாக வழிகாட்ட வேண்டி
இசைப் பாக்களால் ஆராதிக்கின்றோம்
இரங்கிடுவாய் பாலன் இயேசுவே!

கிறிஸ்துவின் ஓர் உடலாக நாம்
கிறிஸ்தவ விழுமியங்களை நோக்கி
கிறிஸ்துவின் நிறையன்பு தனையாக்கி
கிறிஸ்மஸ் மகிழ்வைக் கொண்டாடுவோம்!

ஆ. சான் பெனற்
புனித யாகப்பர் ஆலயம்
இளவாலை.

## பாதுகாப்புப் படையினர் யாழ். ஆயருடன் சந்திப்பு



யாழ் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. காலிங்க ஜெயசிங்க அவர்களும் இராணுவத்தின் 51வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிசாந்த முதுமாலா அவர்களும் யாழ் ஆயர் அவர்களை யாழ் ஆயர் இல்லத்தில் கடந்த வாரம் சந்தித்து யாழ் மாவட்டப்பாதுகாப்பு நிலைமை குறித்தும் பண்டிகைக்காலத்தில் மக்களுக்கு வழங்க வேண்டிய சிறப்புப் பாதுகாப்புக்குறித்தும் கலந்துரையாடினார்.

## குருக்கள் துறவிகளுக்கான கிறிஸ்மஸ் கரோல்



யாழ். மறைக்கோட்டத்தில் உள்ள குருக்கள், துறவிகளுக்கான சிறப்பு கிறிஸ்மஸ் கரோல் வழிபாடு கடந்தவாரம் புனித சவேரியார் உயர் குருமடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து இறையாசீர் வழங்கினார். இவ்வழிபாட்டில் கிறிஸ்மஸ் செய்தியை அருட்பணி மகான் அலோசியஸ் அடிகளார் வழங்கியிருந்தார்.

## பிறிகேடியர் அமறர் அண்டனி டேவிட் அவர்களின் முதலாம் ஆண்டு அஞ்சலி



யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிறிகேடியர் அமரர் அண்டனி டேவிட் அவர்களின் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு 12ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை யாழ். டேவிட் வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அழகியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அஞ்சலி நிகழ்வும் நினைவு மலர் வெளியீடும் இடம்பெற்றன.

பிறிகேடியர் அண்டனி டேவிட் நிதியத்தின் மூலமாக யாழ். மறைமாவட்டத்தின் பல கல்வி நிறுவனங்கள் ஊடாக ஏராளமான மாணவர்கள் உதவி பெற்று வருகின்றனர்.

குறிப்பாக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மடுத்தீனார் சிறிய குருமடம், புனித யாகப்பர் ஆலயம், திருக்குடும்பக் கன்னியர் சபை, வெண்புரவிநகர் பாலர் பாடசாலை ஆகியவற்றில் கல்விகற்கும் ஏராளமான மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்நிதியத்தினால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் குருக்கள் துறவிகள் நிதியத்தின் பங்காளிகள், பயனாளிகளெனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ். சிறைச்சாலையில் ஒளிவிழா நிகழ்வுகள




யாழ். சிறைச்சாலையில் ஒளிவிழா நிகழ்வுகள் 15.12.2024 அன்று யாழ். சிறைச்சாலை ஆன்மீகக் குரு அருட்பணி. அ.பீ. திருமகன் அடிகளாரின் ஒழுங்குபடுதலில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் திருப்பலியை அருட்பணி. எ.ஜெ. யாவிஸ், அருட்பணி. அ.பீ. திருமகன் மற்றும் அருட்பணி. எஸ். சந்திரதஸ் (அமதி) ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து யாழ். சிறைச்சாலையின் ஆன்மிக குரு அருட்பணி. அ.பீ. திருமகன் மற்றும் பிரதம சிறைக்காப்பாளர் உரையாற்றினர். பின்னர் திருச்சிலுவை வைத்தியசாலைத் தாதிய மாணவர்களால் நாத்தார் கீதங்கள் இசைக்கப்பட்டு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக பாடசாலைகள் மற்றும் பங்குகளில் இருந்து கிடைக்க பெற்ற அன்பளிப்புப் பொருட்கள் சிறைக்கைதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் , பொலீஸ் அதிகாரிகள், சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## யூபிலி ஆண்டில் ஆலயங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ள பதாதை




இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது